# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 60
விலை ரூபாய் 30.00

தீபம்–60 | ஆவணிஇதழ் – 2019,
ஆரம்பம் 15 மாசி - 2013

திருமறைக்கல்வி நிலையம்,
இல: 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 2054362

இதோ, மீட்பு, வல்லமை, நம் கடவுளின் ஆட்சி (திருவெளிப்பாடு 12:10)

## அருட்சாதன பெருவிழா 2019
## கிறிஸ்து அரசர் ஆலயம்: கன்னியா

கன்னியா கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 07ம் திகதி ஆடி மாதம் காலை 7.30 மணிக்கு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதி. வண. நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் தலைமையில் அருட்சாதன பெருவிழா கூட்டுத்திருப்பலி அருட்சாதனங்கள் பெறும் பிள்ளைகள் அவர்களின் பெற்றோர் இறைமக்கள் சமுகம் ஒன்றாக இணைந்து ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்திருப்பலியின் போது 13 பிள்ளைகள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தையும் 07 பிள்ளைகள் திவ்விய நற்கருணை அருட்சாதனத்தையும் பெற்றுக்கொண்டார்கள். எம் மாணவர்களை ஒரு வருட காலமாக புனித அன்னை தெரோசா கன்னியர்களும் மறை ஆசிரியர்களும் அர்பணத்துடனும் ஆர்வத்துடனும் கற்பித்து வழிகாட்டியமை குறிப்பிடத்தக்கது. எம் மாணவர்களுக்கான ஒப்புரவு அருட்சாதனம் 05.07.2019 பி.ப 4.00 மணிக்கு அருட்பணியாளர்களின் முழுமையான ஒத்துழைப் பாலும் பிள்ளைகளின் ஆர்வத்தினாலும் இனிதே நிறைவேற்றப்பட்டது. அன்றைய திருப்பலியில் இறைமக்களின் முழுமையான பங்களிப்புடனும் திருப்பலி பாடல்கள் பீடப்பணியாளர்களின் உதவிகளையும் எம் மறை மாவட்ட சிறிய குருமட மாணவர்கள் அர்பணிப்புடன் கடமைகளை நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது இதற்காக சிறிய குருமட அதிபர் அவர்களுக்கும் சிறிய குருமட மாணவர்களுக்கும் எமது நன்றிகளும் இறைஆசீர்களும். இந்த அருட்சாதன கூட்டுத் திருப்பலியை எமக்காக இறைவனிடம் ஒப்புக்கொடுத்து மறையுரை ஆற்றி எம் பிள்ளைகளுக்கு அருட்சாதனங்களை அருட்பொழிவு செய்த எம் மறை மாவட்ட ஆயர் அவர்களுக்கு எமது நன்றிகளும் இறை ஆசீர்களும் உரித்தாகட்டும். எம் மாணவர்களின் அருட்சாதன பெருவிழா கூட்டுத் திருப்பலியில் எம்முடன் இணைந்து பங்குபற்றிய அனைத்து அருட்பணியாளர்கள் அருட் சகோதரிகள் இறைமக்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளும் இறைஆசீர்களும்.





இந்த ஆசீர்வாதமான நாளை மென்மேலும் சிறப்பிக்கும் முகமாக 03 நிகழ்வுகள் நிறைவேற்றப்பட்டன.

1. அருட்பணி சகாய ஜோன்பிள்ளை அடிகளார் – மறைமாவட்ட நிதிப்பொறுப்பாளரின் 50வது பிறந்த நாள் கொண்டாட்டம்.





## இயேசுவோடு 12 மணி நேரம் விசேட நற்கருணை ஆராதனை

இடம் : புனித அந்தோனியார் ஆலயம், சீனன்குடா

காலம் : 03. 08. 2019 ( சனிக்கிழமை)

நேரம் : மதியம் 12 மணி முதல் இரவு 12 மணி வரை

திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக செபத்தில் இணைந்திடுவோம்.




2. கனடா – திருகோணமலை கத்தோலிக்க மக்களின் நிதி உதவியினால் நிர்மாணிக் கப்பட்ட கிறிஸ்து அரசர் கல்வி நிலையம் ஆயரின் ஆசீர்வாதத்துடன் திறந்து வைக்கப்பட்டது.





3. எம் பங்கின் திருப்பாலத்துவ ஊக்குவிப்பாளர்கள் திருப்பாலத்துவ பிள்ளைகளின் திறமைகளை வெளிக்கொணரும் முகமாக அவர்களின் கைவண்ணத்தால் உருவாக் கப்பட்ட வாழ்த்துமடல்கள் கைபொருட்களின் கண்காட்சியும் விற்பனையும்.





தகவல் : செல்வி. பு. ரவிதா
திருப்பாலத்துவ ஊக்குவிப்பாளர் - கன்னியா

## வத்திக்கானில் மேற்கொள்ளப்பட்டுள்ள பசுமை முயற்சிகள்

ஆதாரம் : வத்திக்கான் வானொலி



பூமிக்கோளத்தை காப்பதற்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் காட்டிவரும் அக்கறையைத் தொடர்ந்து, வத்திக்கானில் பசுமை முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று வத்திக்கான் தோட்டங்களின் பொறுப்பாளர் Rafael Ignacio Tornini அவர்கள் இத்தாலியின் ANSA செய்தியிடம் கூறினார்.

குப்பைகளை மறுசுழற்சி செய்வதற்கு ஐரோப்பிய நாடுகள் விதித்துள்ள கடுமையான விதிமுறைகளுக்கு உட்பட்டு வத்திக்கானில் சேர்க்கப்படும் குப்பைகள் மறுசுழற்சி செய்யப்படுவதாக Tonini அவர்கள் கூறியுள்ளார்.

சுற்றுச்சூழலை மையப்படுத்தி 2015ம் அண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இறைவா உமக்கே புகழ் என்ற திருமடலை வெளிட்டதைத் தொடர்ந்து, குப்பைகளை மேலாண்மை செய்யும் 'சுற்றுச் சூழல் மையம்' வத்திக்கானில் உருவாக்கப்பட்டது என்று Tornini அவர்கள் சுட்டிக் காட்டினார்.

இவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களில், இந்த மையத்திற்கு வந்து சேர்ந்த குப்பைகளில் 98 விழுக்காடு குப்பைகள் ஐரோப்பிய விதிமுறைகளுக்கு உட்பட்டு பிரிக்கப்பட்டு அனுப்பப்பட்டன என்றும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வத்தை நாடுவது போல் ஞானத்தை நாடு. (நீதிமொழி 2:4)

சுயவிழிப்புணர்வுத் தொடர் - 04

# இன்னுமா தயக்கம்!



இறைஇயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே! திருமலை தீபம் இதழ் வாயிலாக மீண்டும் உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். சென்ற இதழில் இறைவனை நாம் நேரிய உள்ளத்தோடு சந்திக்க வேண்டும் என்பதைப் பார்த்தோம். ஜீன் மாதம் இயேசுவின் திரு இரத்தத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதமாகும். இந்த மாதம் ஆண்டவரின் மாபெரும் இரக்கத்தை நமக்கு வெளிப்படுத்துகின்றது. எப்படித்தான் இறைவனைத் தேடினாலும், நாம் தேடிய மகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்ள முடியாமல் தவிக்கின்றோம். அவ்வாறு மகிழ்ச்சியைப் பெறுவதற்கு தடையாக உள்ள தயக்கங்களைப் பற்றி இந்த மாத இதழில் பார்ப்போம்.

### மகிழ்வு காணாமற்போன கதை!

மனிதர்களின் இதயம், பல்வேறு தேவைகளால் ஏற்படும் கலக்கங்களாலும் ஆசைகளாலும் அலைமோதிக் கொண்டிருக்கின்றது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இந்த ஆசைகளாலும் கலக்கங்களாலுமே நம் செயல்பாடுகள் தீர்மானிக்கப்பட்டுக் கொண்டுள்ளன என்பதை நாம் அறிவோமா? உண்மையில் மனிதன் தான் நினைத்தது போல நடப்பதில்லை. தான் விரும்பியதையும் செய்வதில்லை. பவுலடிகளார், "ஆண்டவரே நான் விரும்பியதை நான் செய்வதில்லை, நான் விரும்பாததையே செய்கின்றேன்" என்று உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் கூறுகின்றார். அப்படியானால், நாம் ஏன் நாம் விரும்பாத செயல்களைச் செய்து கொண்டிருக்கின்றோம்? என்ற கேள்வி நம் மனதில் எழுகின்றது. பவுலடிகளார் இதனை, ஊனியல்பின் செயல்பாடு என்று கூறுகின்றார். புனித அகுஸ்தினார், "மனித எண்ணங்கள் எப்போதுமே தீமை நாடியதாகவே இருக்கின்றன. தாமாகவே அவை பாவத்தை நோக்கி மனிதனை இழுத்துச் செல்கின்றன. பாவத்தைச் செய்யும் போது, மனிதன் அவற்றைப் பாவம் எனக் கண்டுகொள்கின்றான். ஆனாலும், அப்பாவத்தைச் செய்வதிலிருந்து அவன் தன்னை விடுவித்துக் கொள்ள முடியாமல் இருக்கின்றான்!" என்று கூறுகின்றார். தாய்த்திருச்சபை, இத்தகைய எண்ணங்களையே நம் ஜென்மப் பாவம் என்று கூறுகின்றது. இவை இயல்பாகவே நம் செயல்களோடு கலந்துவிட்ட ஒன்றாக இருக்கின்றது. இந்த தீமை எண்ணங்களிலிருந்து விடுபடுவதே இறைவன் நமக்குத் தந்த மீட்பாகும். நம் எண்ணங்கள் தீமையை நாடியிருப்பதால், நாம் பாவங்களை மிக எளிதாக செய்துவிட்டு அந்தத் பாவங்கள் தரும் தீமைகளால் பாதிக்கப்பட்டு நிம்மதி இழந்து மீண்டும் மீண்டும் பாவத்திற்குள்ளேயே விழுந்து அந்த வட்டத்திற்குள்ளேயே சுற்றிக் கொண்டிருக்கின்றோம். எனவே பாவத்தை விட்டுவிட முடியாமல் பாவத்திலேயே உழன்றுகொண்டிருக்கின்றோம். இதையே பவுலடிகளார், "பாவம் செய்பவர்கள், பாவத்திற்கு அடிமை" என்று கூறுகின்றார்.

அன்பார்ந்தவர்களே! இந்தப் பாவத்திலிருந்து நாம் விடுபடவேண்டும் என்பதற்காகத் தான் நம் ஆண்டவர் இயேசு இந்த உலகிற்கு வந்தார், சிலுவையில் அறையப்பட்டார், இறந்து உயிர்த்தெழுந்தார், நமக்கு திருவருட்சாதனங்களைத் தந்துள்ளார். எனவே திருச்சபையின் முக்கிய நிலைப்பாடாக மனித மீட்பு அடங்கியுள்ளது. மனித மீட்பு என்பது, மனிதனின் அனைத்து அடிமை நிலைகளினின்றும் அவன் விடுபடவேண்டும் என்பதாகும்.

இந்த பாவங்கள் நம் வாழ்விற்குள் எவ்வாறு நுழைகின்றன? ஏன் நாம் இவற்றைத் தடுக்க முடியாமல் தவிக்கின்றோம்? நமக்கு முக்கியமாக கொடுக்கப்பட்ட திருவருட்சாதனங்கள் நமக்கு எப்படி உதவி செய்ய முடியும்? என்பதைப் பற்றி தொடர்ந்த இதழ்களில் பார்க்கப் போகின்றோம். நாம் பாவம் என்று அறிந்து அவற்றைச் செய்யக்கூடாது என்று தெரிந்திருந்தும் அவற்றைச் செய்கின்றோம் என்றால், நாம் அந்தப் பாவத்தால் அடிமைப்படுத்தப்பட்டுள்ளோம் என்று பொருள். முதலில், நம் மனித இனத்தை மிகப்பெரிய அச்சுறுத்தலுக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கும் ஒரு அடிமை நிலையைப் பற்றிப் பார்ப்போம். அதுவே, மனிதனின் "நான்" என்னும் அடிமை நிலையாகும். இந்த அடிமை நிலை எப்படி நம் மனதிற்குள் நுழைகின்றது என்பதைப் பார்த்தால், அதிலிருந்து நாம் இதனை எப்படி மேற்கொள்ளலாம், என்ற தெளிவினை நாம் பெறலாம்.

ஒரு காட்டிற்குள் ஒரு பழங்குடி சிறுவன் பயணித்துக் கொண்டிருக்கின்றான். காட்டிற்குள் பலவிதமான விலங்குகள் வாழ்கின்றன. அவன் சென்றுகொண்டிருந்த பாதையில் கரடிகள் அதிகம் வாழ்கின்றன. ஆனாலும் இந்த சிறுவன் தன்னந்தனியாக சென்றுகொண்டிருக்கின்றான். அவனுக்கு உள்ளூர பயம் இருந்தாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் பயணம் செய்கின்றான். அவனது கையில் ஒரு அகலமான மரப்பட்டை அவனது உயரத்தை விட இரண்டு மடங்கு நீளத்தில் காணப்படுகின்றது. அதை அவன் சுமந்து கொண்டு காட்டில் நடந்து செல்கின்றான். பார்ப்பவர்களுக்கு, கொடிய கரடிகள் வாழும் இந்தக் காட்டுப்பகுதியில் நடந்து செல்லும் இந்த சிறுவன், இந்த மரப்பட்டையை வைத்து எத்தனை கரடிகளை விரட்ட முடியும், அவை இவனை கடித்துவிடுமல்லவா? என்று வியக்கலாம். இந்நிலையில் அந்த சிறுவன் வேகமாக தான் அடைய வேண்டிய இடத்தை நோக்கி ஓடுகின்றான். அதற்குள், அங்கே ஒரு பெரிய கரடி வந்துவிடுகின்றது. அப்போது, அந்த சிறுவன், தான் கையில் வைத்திருந்த அகன்ற நீளமான மரப்பட்டையை தன் உடலோடு சேர்த்துப் பிடித்து, தன் உயரத்தை அதிகப்படுத்திக் காட்டுகின்றான், அப்போது அந்த கரடியும் தன் இரண்டு கால்களில் நின்று தன் உயரத்தைக் காட்டுகின்றது. ஆனால், மரப்பட்டையின் உயரம், கரடியின் உயரத்தை விட அதிகமாக இருப்பதால். சிறுவன் கரடியை விட உயரமாகத் தெரிகின்றான். தன்னை விட உயரமான மிருகத்தைப் பார்த்ததால், கரடி சற்று பின்வாங்குகின்றது. சிறுவன் தன் உயரத்தை அதிகப்படுத்திக் காட்டிக் கொண்டே மெதுவாக நகர்ந்து தன் இருப்பிடத்தை நோக்கிச் செல்கின்றான். தன் இருப்பிடத்தை நெருங்கும் வேளையில் அங்கிருந்த மற்ற பழங்குடியினர் வந்து கரடியை விரட்டி சிறுவனை காப்பாற்றுகின்றனர். இந்த நிகழ்வில், இயற்கையில், விலங்குகள் தன்னை விட உயரமான விலங்கை தாக்குவதற்கு முன் சற்றுத் தயங்குகின்றன, அல்லது தாக்க பயப்படுகின்றன. இந்த நிலை தான், "நான் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றால், நான் என்னை, மற்றவரை விட பெரியவனாகக் காட்டிக் கொள்ள வேண்டும்" என்ற சிந்தனை[illegible]

எனவே எந்த ஒரு மனிதன் தன் வாழ்வில் சுயமரியாதை இல்லாமல் இருக்கின்றானோ, அல்லது தன்னைச் சுற்றி வாழும் மனிதர்களைப் பற்றிய பயத்தில் வாழ்கின்றானோ, அவன் தன் பயத்தின் உந்துதலால், தன்னை பெரியவன் எனக் காட்டிக் கொள்ள முயல்கின்றான். எனவே நாம் அறிந்துகொள்வது என்னவென்றால், நம் "நான்" என்ற எண்ணத்தின் ஊற்று, நம் "பயம்" என்பது தான். இந்தப் பயத்தின் வழியாக மனிதனின் இதயத்தினுள் நுழைந்த "நான்" என்ற எண்ணம், தன் அறியாமை விழுதுகளை மிக வேகமாகப் பரப்பி, அதில் மனிதனுக்கு ஒரு இனம்புரியாத மகிழ்ச்சியை உருவாக்குகின்றது. தன்னை மற்றவர் புகழும் போது, தன்னை மற்றவர் மரியாதையாக நடத்தும் போது, தன்னைப் பற்றி மற்றவர் கதைக்கும் போது என்று சிறுக சிறுக மனிதன் இந்த "நான்" என்ற எண்ணம் தருகின்ற போதையில் கரைந்து கொண்டிருக்கின்றான். பயம் காரணமாக மனிதனுள் நுழைந்த இந்த எண்ணம், அதன் பின் அவனது போதையாக மாறிவிடுகின்றது. அதன் பின் அந்தப் போதைக்காக மனிதன் எதை வேண்டுமானாலும் செய்யக்கூடிய நிலைக்குத் தள்ளப்படுகின்றான். அடிப்படையில் "நான்" என்ற எண்ணம் போதையாகும். போதை என்று கூறும் போது, அது மனிதனின் கட்டுப்பாட்டைக் கடந்து மனிதனைக் கட்டுப்படுத்தும் ஒரு காரணியாகும். எனவே தான், மது போதையிலுள்ள மனிதர்கள், மதுவினால் வரும் அனைத்து தீமைகளையும் அறிந்திருப்பார்கள், ஆனாலும், மதுவை கைவிட முடியாமல் திண்டாடுவார்கள். இதுவே போதையாகும். போதை நம்மைக் கட்டுப்படுத்தும். அது போன்று "நான்" என்ற எண்ணமும் நம்மைக் கட்டுப்படுத்தும். இந்த "நான்" உள்ளே நுழைந்துவிட்டால், அது அனைத்துவிதமான தீமைகளையும் நம்முள் கொண்டு வந்துவிடும். "நான்" என்பது ஒரு போட்டி மனப்பான்மையாகும். எனவே நம்மைச் சுற்றியுள்ள அனைவரையும் முதலில் நமக்குப் போட்டியாளர்களாகப் பார்க்கும். போட்டியாளர்கள் கொஞ்சம் கொஞ்சமாக எதிரிகளாக மாறுகின்றார்கள், எதிரிகள் நமக்கு வெறுப்பையும், பயத்தையும் மட்டுமே தருகின்றார்கள். மீண்டும், பயம். இந்தப் பயம் மீண்டும் நம்முடைய "நான்" என்ற எண்ணத்தை வலுப்பெறச் செய்கின்றது, நான், மீண்டும் பல தீமை-களை கொண்டு வருகின்றது. எனவே தான், "நான்" என்ற ஆணவம் நம் வாழ்வில் உள்ள அனைத்து தீமைகளின் தாய்வீடு என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த "நான", "பயம்" என்ற அச்சாரத்தில் போதை என்ற சக்தி கொண்டு சுழல்கின்றது.

இதன் விளைவுகளாக, ஆலயத்திற்கு வந்தாலும், நாம் இறைவனை வழிபடுவதில்லை. இறைவனை வழிபடுவதாக நினைத்துக் கொண்டு நம் "நான்" என்ற எண்ணத்தையே எண்ணெய் ஊற்றி வளர்த்துக் கொண்டிருக்கின்றோம். இறைவனுக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை, "நான்" கொடுக்கும் தீய செயல்களுக்குக் கொடுக்கின்றோம். இந்த தீமைகளில் முக்கிய இடத்தை வகிப்பது, பணம். "பணம் பத்தும் செய்யும்" என்று பழமொழி கூறுவார்கள். இந்தப் பத்தும் செய்யும் பணம், அந்தப் பத்தில் ஒரு நல்லதைக் கூட செய்யாது என்பது தான் நிதர்சனமான உண்மை. பணம், நம்மை வியாபாரியாக மட்டுமே மாற்றுமே தவிர, வேறு ஒரு நல்லதையும் செய்யாது. "நான் ஒன்று கொடுத்தால், நீ எனக்கு இன்னொன்று தர வேண்டும்!" என்ற நிலை தான் பணத்தின் மூலம் நமக்குக் கிடைக்கும். எனவே கைம்மாறு கருதாத நன்மை, பிறரை எதிர்பார்ப்பு கருதாமல் அன்பு செய்தல், போன்றவை, பணத்தின் சிந்தனைக்கு எதிரான சிந்தனையாகும். இவற்றை கொஞ்சம் கொஞ்சமான பணம் எதிர்க்கின்றது. அப்படி எதிர்த்து எதிர்த்து அந்த பகிர்தல் எண்ணமே இல்லாமல் செய்துவிடுகின்றது. எனவே தான், ஆண்டவர் இயேசு, "ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தாலும் பணக்காரன் இறையரசில் நுழைவது கடினம்" என்று கூறுகின்றார்.

நாம் நன்றாகப் பார்த்திருப்போம், ஒரு குழுவிலோ, ஒரு குடும்பத்திலோ, "நானா நீயா" என்ற போட்டி வந்துவிட்டால், நீதான் பெரியவன் என்று யாராலும் விட்டுக் கொடுக்க முடிவதில்லை. எப்பாடுபட்டாவது தன்னை பிறரை விடப் பெரியவனாகக் காட்டியே ஆகவேண்டும் என்ற முயற்சியில் அது பெரியபிரச்சனையாக வெடிக்கிறது. அத்தோடு ஒருவர் மற்றவர் மீது வைத்திருந்த அன்பு, மரியாதை அனைத்தையும் அழித்து அங்கே ஒற்றுமையே இல்லாமல் செய்துவிடுகின்றது. அங்கே பிரிவினைகள் மட்டுமே வளர்ந்து நிற்கின்றன. உறவுகள் மறைந்தபின் மனிதர்களால் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. எனவே "நான்" என்ற எண்ணத்தின் முதல் தீமை பணம் என்று பார்த்தால், அந்தத் தீமையின் விளைவு, பிரிவினை. பிரிவினைகளே மனிதர்களின் நிம்மதியின்மையின் முதல் படியாகும்.

அப்படினால், இந்தத் தீமையிலிருந்து நாம் எப்படி வெளியே வருவது? ஆண்டவர் தந்த மீட்பு இந்த அடிமை நிலையிலிருந்து நம்மை எப்படி மீட்கின்றது? என்பதை வருகின்ற இதழில் காண்போம்.

மீண்டும் உங்களை திருமலை தீபம் இதழ் வாயிலாக சந்திக்கும் வரை உங்களிடமிருந்து நன்றி கூறி விடைபெறுகின்றேன். வணக்கம்!

**இறையாசீருடன் அருட்பணி அலெக்ஸ், க. ச**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படித்ததில் பிடித்தது



### தனி மரம்

அறுபது வயது ஆலமரம்.
விழுதுகளை விட்டு உயர்ந்து வளர்ந்திருந்தது.
பக்கவாட்டிலும் பரந்து விரிந்த வளர்ச்சி.
அதன் அடியில்...
  பெரிய பெரிய மரமாக வேண்டிய
  சின்னச் சின்னச் செடிகள்.
ஆலமரத்தின் நிழலை வாழ்த்தின:
  'எவ்வளவு பெரிய மரம்..!
  இந்த நல்ல மரமின்றி
  எங்களுக்க நல்வாழ்வு இல்லை.
  இம்மரமே எங்கள் முன் மாதிரி.
  எவ்வளவு சுகமான வாழ்வு இது..!'
பெரியவர் ஒருவர் வந்தார்.
கொழு கொழுவென வளர்ந்திருந்த
சின்னச் சின்னச் செடி-மரங்களைப் பார்த்தார்.
மனமிரங்கினார்:
  'தள தளவென்ற இந்த வளர்ச்சி ஆரோக்கியமானதல்ல.'

பிடுங்கி வேறொரு இடத்தில் நட்டு வளர்க்க முயன்றார்.
அலறின அறிவு கெட்ட சின்ன் மரங்கள்:
  'ஐயோ, எங்களைப் பிடுங்காதீர்கள்.
  இந்த ஆலமர நிழலின்றி வேறு வாழ்வை எங்களால்
  யோசித்துக்கூடப் பார்க்க முடியாது.
  வேறு இடத்தில் இப்படி கொழு கொழு வென வளர முடியுமா?
  நாங்கள் நிழலுக்கு எங்கு போவோம்?'
பெரியவர் சொன்னார்:
  'இந்த ஆலயமரம் இல்லையென்றால்
  உங்களுக்கு நிழல் கிடைக்காமல் போகலாம்.
  ஆனால்... சூரிய ஒளி கிடைக்குமே..!
  சூரிய ஒளி இல்லாமல் தான்
  நீங்கள் கொழு கொழு வென்று இருக்கிறீர்கள்.
  இப்படியே போனால் உங்களால் வளர்ந்து கனி தர முடியாது.'
தொடர்ந்தார்:
  'சின்னிச் சின்னச் செடி மரங்களே..!
  நிழல் தர வேண்டிய நீங்களே
  நிழலுக்கு அலையலாமா?'
புரிந்து கொண்ட செடி-மரங்கள் அறிவுரை கேட்டு நின்றன:
  'நாங்களும் தனியொரு பெரிய மரமாய் உருவாக
  என்ன செய்ய வேண்டும்?'
கடைசியாய்ச் சொன்னார்:
  'சுய சார்பு கொள்ளுங்கள்.
  சொந்தக் காலிலே நில்லுங்கள்.'

பரந்து வளர்ந்த ஆல மரத்தடியில்...
எந்த மரமும் செழித்து வளர முடியாது
அப்படி ஒருவேளை வளர்ந்தால்
அது ஒட்டுண்ணியும் சாருண்ணியுமாகத் தான்
இருக்கும்



## பதிப்பாசிரியர் பகிர்வு



**அருட்பணியாளர். T. கிங்ஸ்லி றொபட்**

அன்பிற்கினிய வாசகப் பெருமக்களே!

**"AD MAJOREM DEI GLORIAM" – "FOR THE GREATER GLORY OF GOD"**

ஆடி மற்றும் ஆவணி மாதங்கள் எமது மறைமாவட்டத்திற்கு மிகவும் நெருக்கமான, மறைமாவட்ட வளர்ச்சியில் ஊன்றுகோல்களாக இருக்கக்கூடிய மாதங்களாகும்.

இயேசு சபைத் துறவிகள் எமது மறைமாவட்டத்தின் வளர்ச்சியில் சிறப்பாக கல்வித்துறை, விளையாட்டுத்துறை, தொழில்நுட்பப் பயிற்சிசார் துறை, லொ-யோலா சுற்றுச் சூழல் மற்றும் சமூக நீதித் துறை மற்றும் பங்குத் தளங்களில் தடம் பதித்துள்ளனர் என்றால் அது மிகையல்ல. மட்டுநகர் புனித மிக்கேல் கல்லூரி (Saint Michael's College, Batticaloa), திருமலை புனித யோசேப்பு (சூசையப்பர் - வளனார்) கல்லூரி (Saint Joseph's College, Trincomalee), மட்டுநகர் தொழில்நுட்பக் கல்லூரி (ETI – Eastern Technical Institute, Batticaloa), திருமலை சுற்றுச் சூழல் மற்றும் சமூக நீதி மையம் (Centre for Ecology & Justice, Trincomalee), திருமலை லொயோலா அறிவியல் கழகம் (Loyola Academy, Trincomalee) என்பவை இவற்றிற்கான வளர்ச்சியின் தடங்களான இருக்கின்றன.

எனவே வரலாற்றைத் திரும்பிப் பார்த்து, தற்கால நிலையை சீர்தூக்கிப் பார்த்து, இதுவரை எம்மை தூக்கி உயர்த்திய அனைத்து இயேசு சபைத் துறவிகளையும் நன்றியோடுகூட நினைவில் கொள்வோம். இதன்வழி தூர நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட அவர்தம் செயல் திட்டங்களை, ஆன்மீகப் பணிகளை, கல்வித் துறை முன்னேற்றங்களை, பங்குவமாய் வழிநடத்திய ஆற்றலை அறிவை நாம் பெற்ற பொக்கிஷமாக நினைத்து, அவைகளின் தொடர் வளர்ச்சியல் நமது பங்களிப்பை பதிவு செய்து முன்னோக்கி நடக்கும் பாரிய பொறுப்பு நம் வசமாகிறது.

1839ஆம் ஆண்டு ஆவணி 25ம் நாள் திருத்தந்தை 13ம் லியோவினால் புதிய மறைமாவட்டமாக பிரகடனப்படுத்தப்பட்ட எமது திருகோணமலை மறைமாவட்டம் இவ்வருடம் 126வது அகவையில் கால் பதிக்கின்றது. கடந்த 126 வருடங்களாக புனித இஞ்ஞாசியாரை எமது மறைமாவட்டத்தின் பாதுகாவலராகக் கொண்டு பயணித்துள்ளோம். அவர்தம் பரிந்துரை வழியாக நாம் பெற்றுக்கொண்ட சகல ஆசீர்வாதங்களுக்காக இறைவனுக்கு நன்றி சொல்வோம். எம் மறைமாவட்டத்தில் பணியாற்றி இறைபதம் அடைந்த அனைத்து இயேசு சபை ஆயர்களுக்காகவும், துறவிகளுக்காவும் இறைவேண்டல் செய்கின்றோம். தற்போது எம்மத்தியிலே தொடர்ந்து பணியாற்றும் அனைத்துத் இயேசு சபைத் துறவிகளுக்காகவும் நன்றி சொல்கின்றோம்.


'கடவுளின் அதிஉயர் மகிமைக்காக' அனைத்தையும் செவ்வனே செய்ய வாழ்த்துக்கள்!

## புரட்டாதி 2019 மறைமாவட்ட நிகழ்வுகள்

| | |
|---|---|
| 02.09.2019 ஞாயிற்றுக்கிழமை | : பொதுக்காலம் 22ம் ஞாயிறு |
| | : தேசிய இளைஞர் தினம் |
| | : சாம்பல்தீவு - புனித திருமுழுக்கு யோவான் ஆலய வருடாந்தத் திருவிழா. |
| 03.09.2019 செவ்வாய்க்கிழமை | : குருக்களுக்கான மாதாந்தத் தியானம். |
| 07.09.2019 சனிக்கிழமை | : 12 மணி நேர நற்கருணை ஆராதனை தம்பலகாமம் பங்கு. |
| 08.09.2019 ஞாயிற்றுக்கிழமை | : பொதுக்காலம் 23ம் ஞாயிறு. |
| | : நிலாவெளி - கோபாலபுரம் வேளாங்கண்ணி அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா. |
| 09.09.2019 திங்கள்கிழமை | : அருளாளர் பிறட்றிக் ஓசான்னம் - விழா. |
| 13.09.2019 வெள்ளிக்கிழமை | : புனித வின்சன்ட் டி பவுல் ஆலோசனை சபை மாதாந்தக் கூட்டம். |
| | குடும்ப அப்போஸ்தலம் - திருமண முன் ஆயத்தக் கருத்தரங்கு. |
| 14.09.2019 சனிக்கிழமை | : மரியாயின் சேனை - கிய+ரியாக் கூட்டம். |
| | : குடும்ப அப்போஸ்தலம் - திருமண முன் ஆயத்தக் கருத்தரங்கு. |
| | கி. வா. சமூகம் - திருகோணமலை, மட்டக்களப்பு அங்கத்தவர்களின் ஒன்றுகூடல். |
| 15.09.2019 ஞாயிற்றுக்கிழமை | : பொதுக்காலம் 24ம் ஞாயிறு. |
| | : தேசிய மறைக்கல்வி தினம் |
| | : திருகோணமலை பொது வைத்தியசாலை - புனித வேளாங்கண்ணி அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா. |
| | : சாம்பல்தீவு - 6ம் கட்டை திருச்சிலுவை ஆலய வருடாந்தத் திருவிழா. |
| | : கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் - நாட்டியப் போட்டி. |
| 21.09.2019 சனிக்கிழமை | : கி. வா. சமூகம் - மாதாந்த நற்கருணை ஆராதனை. |
| 22.09.2019 ஞாயிற்றுக்கிழமை | : பொதுக்காலம் 24ம் ஞாயிறு. |
| | : கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் இளையோர் ஞாயிறு. |
| 27.09.2019 வெள்ளிக்கிழமை | : புனித வின்சன்ட் டி பவுல் - விழா. |
| 28.09.2019 சனிக்கிழமை | : மறையாசிரியர் கருத்தரங்கு. |
| | : கி. வா. சமூகம் - ஒரு நாள் தியானம். |
| | : அன்பியம் மறைமாவட்ட ஊக்குவிப்பாளர்களுக்கான கூட்டம். |
| 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை | : பொதுக்காலம் 25ம் ஞாயிறு. |
| | : புனித குவாடலூப்பே அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா. |
| | : சாம்பல்தீவு - கோணேசபுரி அதிதூதர் மிக்கேல் ஆலய வருடாந்தத் திருவிழா. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ந்த உள்ளம்



விடியற்காலையை வரவேற்பதற்கு சேவல் கூவத் தொடங்கியது. கடிகாரத்தின் ஒலி அந்த வேளையில் கோவில் மணியோசை போல ஒலித்தது. தூக்கத்தை விட்டெழுவதற்கு சிரமப்பட்டு புரண்டு கொண்டிருந்தாள் ரம்யா. அன்றைய பொழுது விடிந்து விட்டது. அன்றுதான் பள்ளியில் இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள். விளையாட்டுக்களில் அர்வமாகக் கலந்து கொண்டு பல களங்களில் சென்று பரிசுகள் பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஒவ்வொரு மாணவரிடமும் இருந்தது. அதற்காக எப்போது விடியும், பள்ளி திறக்கப்படும், மைதானத்திற்கு அழைத்துச் செல்லப்படுவோம், விளையாட்டுக்கள் எப்போது ஆரம்பமாகும், அதில் எதில் பங்கேற்பது, யார் யாருக்கு பரிசுகள் கிடைக்கும், எந்த அணி முதலிடத்தைப் பெறப்போகிறது என்ற சிந்தனையிலேயே ரம்யாவுக்கு இரவெல்லாம் தூக்கம் வரவில்லை. அவள் எதிர்பார்த்தது போன்ற விடியலை சந்தித்தாள். படுக்கையை விட்டெழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு பாடசாலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். கடந்த நாட்களில் நடந்து முடிந்திருந்த இரு போட்டிகளிலும் முதலாவது மற்றும் இரண்டாவது இடத்தையும் பெற்றிருந்தவள் ரம்யா தான். இறுதி நாள் 200M போட்டி காத்து இருந்தது. அதிலும் அவள்தான் முதலாவதாக வருவாள் என்பது எல்லாரும் எதிர்பார்த்திருந்த விடயம். ரம்யாவும் அன்றைய நாளில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாள். பாடசாலையை நெருங்கிய மாணவர்களின் கண்கள் மைதானத்தை கண்டு வியந்தது. விளையாட்டு இல்லங்கள் ஒவ்வொன்றும் மாணவர்களின் கைவண்ணத்தால் அலங்காரத் தோரணையில் தென்பட்டது.

புதுப் பெண்போல் ஜொலித்தது ஓர் இல்லம். கப்பல் வடிவில் ஓர் இல்லம்: சூரியன் வடிவிலும், தாஜ்மகால் வடிவிலும் இல்லங்கள் அமைக்கப்பட்டு இருந்தன. விளையாட்டுப் போட்டிகளை காண வரும் அதிதிகளை மாணவத் தலைவர்களும், மாணவர், ஆசிரியர்களும் வரவேற்றனர். அடுத்து பயிற்சியின் முதல் கட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சில விளையாட்டுப் போட்டிகள் சில தருணங்களில் சந்தோஷமாக ஆரம்பமானாலும் இறுதியில் சண்டையில் முடிவது தான் இயல்பாக இருந்தது. ஆசிரியர்கள், மாணவர்கள் யாராக இருந்தாலும் போட்டிகளை விளையாடாக மட்டும் நினைக்காமல் அதை வாழ்வாகவே நினைத்து ஐக்கியமாகி விடுகிறார்கள். அதனாலே இப்படியான சண்டைகள் ஏற்படுகின்றன.

இறுதிநாளுக்கான போட்டிகள் ஆரம்பமாகின. இடைக்கிடையே போட்டிகளை திறமையாக எதிர்கொண்டு முதல் மூன்று இடங்களைத் தட்டிச் சென்றவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. அடுத்து ரம்யா கலந்து கொள்ள இருக்கும் 200M போட்டி ஆரம்பமாகவிருந்து. ஓட்டக்காரர்கள் அனைவரையும் மைதானத்திற்கு வரும்படி அழைத்திருந்தார்கள். கொஞ்சநேரத்தில் 06 மாணவர்களுடன் போட்டி ஆரம்பமாகியது. அவர் அவர்களுக்குரிய தளத்தில் தயாராக இருந்தனர். ஓட்டப்போட்டிக்கு பொறுப்பாக இருந்தவர் சமிக்ஞை காட்டியாயிற்று. 06 பேரும் ஓடினர். ரம்யாவும் தான். மற்ற போட்டியாளர்களை விட முன்னிலையில் ஓட்டம் பிடித்தாள் ரம்யா. அவளுக்குப் பின் அவளது உயிர்த்தோழி மாதவியும் வேகமெடுத்துக் கொண்டு இருந்தாள். ஓட்டப்போட்டியை அனைத்து இல்லங்களும் ஆவலுடன் பார்த்து கைதட்டி அரவாரம் செய்து கொண்டிருந்தார்கள். ஒரு குழுவினர் தங்கள் இல்லங்களின் பெயரை இராகமாய் உரக்கச் சொல்லி அவரவர் போட்டியாளர்களை உசுப்பேற்றிக் கொண்டிருந்தனர். ரம்யா எல்லைக் கோட்டை அண்மிக்கவிருந்தாள். ஆனால் நெருங்க நெருங்க அவளின் வேகம் கொஞ்சம் கொஞ்சமாக குறையத் தொடங்கியது. சமயம் பார்த்து ரம்யாவுக்கு அடுத்து முயன்ற மாதவி முந்தியோடி எல்லைக்கோட்டை தாண்டினாள். மாதவி 1வது இடத்தை அடைந்ததும் அவளை ஓடி வந்து அவளது இல்லத்தினர் கட்டியணைத்தனர். பார்வையாளர்கள் மனதில் ஒருவித ஆச்சர்யம் தென்பட்டது.

நல்லா ஓடின புள்ள கடைசி நேரத்திலே விட்டுட்டாளே என்று அங்கு இருந்தவர்களில் சிலர் ஆதங்கப்பட்டனர். பயிற்சி ஆசிரியர்கள் என்ன பிள்ள இப்படிப்பண்ணிட்டியே நாங்கள் நீதான் முதலாவதாய் வருவாய் என்று எதிர்பார்த்தோம் என்றார். எல்லாரது கேள்விகளையும் ரம்யா தனது புன்னகையால் கடந்து சென்றாள். நிகழ்வின் இறுதிக் கட்டமாக வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அன்றைய விளையாட்டிப் போட்டி நிகழ்வு முடிவடைந்து எல்லாரும் மைதானத்தை விட்டு வெளியேறினர். ரம்யா பெற்றோருடன் வீடு வந்து நுழைந்ததும் அவர்கள் அவளை கேள்விகளால் துளைத்தெடுத்து விட்டனர். அதற்கு அவள் சிரித்துக் கொண்டே கூறினாள், 'மாதவி முதல்ல வரனும்னு தான் நான் என்னோட வேகத்தை குறச்சு அவள முன்னுக்கு போக விட்டேன்' என்றாள். உனக்கென்ன பைத்தியமா? நீ முதல்ல வந்திருந்தா உன்ன எல்லாரும் பாராட்டி இருப்பாங்க தானே, என்றாள் தாய். இல்லம்மா மாதவி இதுவரைக்கும் எத்தனையோ போட்டிகளில் கலந்துகிட்டு இருக்கா ஆனா அவள் எதிலையுமே ஜெயித்தது இல்ல. அதனால அவள் எத்தனையோ முறை வேதனைப்பட்டிருக்காள். அதனால தான் இந்தப் போட்டியில நான் அவளுக்காக விட்டுக்குடுத்து அவளை ஜெயிக்க வெச்சன்...

நான் மட்டும் இதில வேகமாக ஓடியிருந்தா அவளுக்கு Cup கிடைச்சிருக்காதே, ஆனா இப்ப அவளுக்கு எவ்வளவு சந்தோஷமாய் இருக்கும்? மத்தவங்க சந்தோஷத்த பாத்து நாமலும் சந்தேதாஷப்படனும் அம்மா என்றாள். ரம்யா, இந்தச் சிறிய வயதில் மகளின் உள்ளம் எத்தனை உயர்வானது என்பதை நினைத்து அந்த தாயின் மனம் ஆனந்தம் அடைந்துது. விழியில் வழிந்தோடிய கண்ணீர்த் துளிகள் கன்னங்களை நனைக்கவே தனது மகளை பெரும் மகிழ்ச்சியுடன் கட்டியணைத்துக் கொண்டனர் அவளது பெற்றோர்கள்.

ஆகவே கிறிஸ்தவர்களாகிய நாமும் உயர்ந்த உள்ளம் படைத்தவர்களாய் மற்றவர்களின் இன்பத்தில் நாம் நிறைவு காண வாழ்ந்திடுவோம் வாழ வைத்திடுவோம்!

**செல்வி .A. ஆன் பௌஸ்தீனா**

# கடவுளே தீர்ப்பிடுவார்

அருட்பணி N.C. அருள்வரதன்



❖ எங்கே மனிதங்களென்று
ஏங்கித்தேடும் காலமாக
காலத்தின் சரிவைக்காணுகிறோமே
உறவுகளிடையே உடைவுகளும்
உதவும் மனநிலைகளும் இல்லை அதனால்
எங்கே அன்பினைக் காணுவது

❖ கொடுமைகள் பெருகியே நாடெங்கும்
கொலைகளும் வன்முறைகளும்
கொடிகட்டிப் பறந்து நின்று
துன்பங்களை விதைக்கும் போது
அன்பும் அமைதியும் மறைந்து போக
அவலங்களே விளைவாகின்றதே

❖ அமைதியின் இல்லங்களிலே
அநீதியின் குண்டுதாக்குதல்கள்
யாருமே நினைத்துப் பாராத
வன்முறையால் வெடிகுண்டுகள்
எத்தனை அவலங்கள் அத்தனைக்கும்
கடவுளே தீர்ப்பிடுவார் உண்மையே




இயேசு சீடர்களிடம்,
'நீங்கள் பாலைநிலத்திலுள்ள
தனிமையான ஓர்
இடத்திற்குச் சென்று
சற்று ஓய்வெடுங்கள்'
என்றார். (மாற் 6:31)

## மறைமாவட்டக் குருக்களின் வருடாந்தத் தியானம்

**காலம்**

2019 ஆவணி 18ம் திகதி முதல் 24ம் திகதி வரை.

**இடம்**

கண்டி - கலஹா இல்லம். (Galaha)

ஆண்டவர் வழங்கும் அருளின் காலமாக,
ஆசீர்வாதங்கள் பலவற்றைக் கொணரும் நாள்களாக
இந்நாள்கள் அமைய
ஆயர் மற்றும்
அனைத்து மறைமாவட்ட அருட்பணியாளர்களையும்
கரமேந்தி செபிக்கின்றோம்!
கைகூப்பி வாழ்த்துகின்றோம்!

**திருத்தந்தையின் (பாப்பிறை) மறைபரப்புச் சபைகளின்
மறைமாவட்ட இயக்குநர் தந்தை,
ஊக்குநர்கள், மற்றும் பிள்ளைகள் அனைவருக்கும் !**

சுதேச குருக்கள், துறவியர் தினத்தையொட்டி நீங்கள் ஆயர்களுக்கும் ஒவ்வொரு அருள்பணியாளர்களுக்கும் தனித்தனியே அனுப்பி வைத்த, கரிசனையும் பாசமும் நிறைந்த வாழ்த்து மடலுக்கு இருகரம் கூப்பி நன்றி ! நன்றி ! நன்றி !



**அருட்பணியாளர் தே. கிங்ஸ்லி றொபட்,
மறைமாவட்ட முதன்மைக்குரு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் திருச்சபை வரலாற்றில் ஒருசில முதற்படிகள்



அருட்பணியாளர். A. A. நவரெட்ணம்
முதுநிலை விரிவுரையாளர்,
கிழக்கு பல்கலைக்கழகம்,

❖ முதலாவது கத்தோலிக்க வழிபாட்டுத்தலமானது கொழும்பில் 1505ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகைதந்தபோது அமைக்கப்பட்டது. இவ்வாலயமானது உரோமையின் திருத்தொண்டரும், மறைசாட்சியுமான புனித லோறன்ஸின் பெயரால் அமைக்கப்பட்டது. அவரது பெயரால் அமைக்கப்பட்டதற்கான காரணம் இலங்கைக்கு வருகைதந்த போர்த்துக்கேயர் படையினரின் தளபதியாக செயலாற்றியவர் புனித லோறன்ஸின் பெயரினைக்கொண்ட லொறென்சோ டீ அல்மேய்டா (Lourenco de Almeida) என்பராவர்.

❖ இலத்தீன் வழிபாட்டு மரபின்படி இலங்கையில் முதற் திருப்பலியானது பிரான்சிஸ்கன் துறவியாகிய அருட்தந்தை வின்சென்ட் (Vincent) என்பரால் போர்த்துக்கேயரால் இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இவர் போர்த்துக்கேய தளபதி லொறென்சோ டீ அல்மெய்டாவின் கப்பலில் பயணித்தவர்களின் ஆன்மீகக் குருவாக பணியாற்றியவர்.

❖ஆசியாவின் முதல் மறைமாவட்டமாக 1534ஆம் ஆண்டில் இந்தியாவின் கோவா உருவாக்கப்பட்டது. அதன் முதல் நிர்வாகியாக மிகேல் வாஸ் குட்டின்கோ (Miguel Vaz Coutinho) என்கின்ற பொதுநிலையாளர் நியமிக்கப்பட்டார். 1538ஆம் ஆண்டில் ஸ்பானிய நாட்டு பிரான்ஸ்சிஸ்கன் துறவி ஜூவான் டீ அல்புகுரேகுவே (Juan de Albuquerque) முதல் ஆயராக நியமிக்கப்பட்டார். மிகேல் வாஸ் அவரது குருமுதல்வராக நியமிக்கப்பட்டார். இம்மறைமாவட்டத்தில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

❖ இலங்கையில் மறைப்பணியாற்ற வருகைதந்த முதலாவது கத்தோலிக்க துறவற சபையினர் பிரான்சிஸ்கன் சபையினராவர். இவர்கள் போர்த்துக்கேய மன்னன் 3ஆம் ஜோனால் (John III) அனுப்பட்டு, 1543ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகைதந்தனர். இவர்களே இலங்கைக்கு வருகைதந்த முதலாவது ஒழுங்கமைக்கப்பட்ட துறவறக் குழுவினராவர்.

❖இலங்கையில் முதலாவதாக கத்தோலிக்க சமயத்தினைத்தழுவி அதிலே வாழ்ந்த ஆட்சியாளர், கோட்டை மன்னன் டொம் ஜூவான் தர்மபால (Dom Juan Dharmapala) (1551 – 1597) ஆவார்.

❖ ஆசியாவின் முதலாவது இலத்தீன் மரபு கன்னியர் இல்லம் கோவாவில் 1606ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புனித மொனிக்காவின் அகுஸ்தீனியன் இல்லமாகும். இவ்வில்லத்தில் இரண்டு யாழ்ப்பாண இளவரசிகள் கன்னியர்களாக உருவானார்கள்.

❖ யாழ்ப்பாண மன்னன் பரராசசேகரத்தின் (1591 - 1615) இரண்டு புதல்விகளே இலங்கையிலிருந்து உருவாகிய முதலிரு கன்னியர்களாவர். அவர்கள் டோனா இசபெல் (Dona Izabel) மற்றும் டோனா மரியா (Dona Maria) ஆகிய இருவரும் கோவாவிலுள்ள புனித மொனிக்கா கன்னியர் இல்லத்தில் தங்களது துறவற வார்த்தைப்பாட்டினை எடுத்துக்கொண்டனர்.

❖ கன்னியர் இல்லத்தின் தலைவியாகத் தெரிவு செய்யப்பட்ட முதல் இலங்கையர் அருட்சகோதரி டோனா மரியாயாவர். இவர் 01.01.1682இல் கோவா புனித மொனிக்கா கன்னியர் இல்லத் தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

❖ இலங்கையில் வாழ்ந்த முதல் ஆங்கிலேயர் பிரான்சிஸ்கன் துறவி அன்ரே (அன்ரூ) என்பவராவர். அவரும் அவரோடு கூடவே மேலுமொரு பிரான்சிஸ்கன் மற்றும் இரண்டு யேசுசபைத் துறவியரும் 1628ஆம் ஆண்டில் யாழ்ப்பாண அரசானது கண்டிய படைகளால் படையெடுக்கப்பட்டபோது கொல்லப்பட்டனர்.

❖கொழும்பினைப் பிறப்பிடமாகக் கொண்ட இயேசுசபைத் துறவி இம்மானுவேல் கொஸ்தா என்பரால் 'Ars Chingalensis Linguae' எனும் சிங்கள இலக்கண நூல் ஐரோப்பிய மொழிகளுள் ஒன்றாகிய இலத்தீன் மொழியில் பதினேழாம் நூற்றாண்டில் முதன்முதலில் உருவாக்கப்பட்டது.

❖ இந்தியாவின் தூத்துக்குடி துறைமுக நகரில் பணியாற்றிய ஐரோப்பிய இயேசுசபைத் துறவி ஹென்றிக் ஹென்றிக்ஸ் என்பரால் 'Arte da lingua malabar' எனும் தமிழ் இலக்கண நூல் ஐரோப்பிய மொழிகளுள் ஒன்றாகிய போர்த்துக்கேய மொழியில் பதினாறாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இவர் 1561 - 1564ற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மன்னாரிலும் மறைப்பணியாற்றியுள்ளார்.

❖ பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அழகியவன்ன என்பரால் எழுதப்பட்ட "குஸ்தாந்தினு கட்டான" (Kustantinu Hatana) எனும் கவிதையே சிங்கள மொழியில் எழுதப்பட்ட முதலாவது கிறிஸ்தவ கவிதையாகும்.

❖புனித ஜோசப்வாஸ் அடிகளாரால் இந்தியாவின் கோவாவில் ஆரம்பிக்கப்பட்ட புனித பிலிப்நேரியாரின் ஒரத்தோரியன் சபையே ஆசியாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது ஒரத்தோரியன் சபையாகும்.

❖பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு வருகைதந்த முதலாவது ஐரோப்பிய மிஸனரி அலெக்ஸ்சாந்தரே பிராங்கோஸ் டமாஸ் (Alexandre-Francois Dumas) ஆவார். இவர் 1842ஆம் ஆண்டின் முதற்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்தார்.

❖ விசுவாசப் பரம்புதல் சபையினால் (Propaganda Fide) இலங்கைக்கு முதன்முதலில் அனுப்பப்பட்ட ஐரோப்பியத் துறவி இத்தாலிய ஒரத்தோரியன் சபையினைச் சார்ந்த ஓராசியோ பெற்றக்கினி (Orazio Bettacchini) ஆவார். இவர் 1842ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்தார்.

❖இலங்கைக்கு வருகைதந்த முதலாவது சில்வெஸ்டர்- ஆசீர்வாதப்பர் துறவற சபைத் (Sylvestro-Benedictine) துறவி இத்தாலியராகிய யூசேப்பே பிராவி (Giuseppe Bravi). இவர் 1845ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் வருகை தந்தார்.

❖இலங்கையில் பணியாற்ற வருகைதந்த முதலாவது இரட்சகர் சபைத்துறவி (Redemptorist) இந்தியாவின் கோவாவினைச் சார்ந்த பிரான்சிஸ் சேவியர் டி மெனாசஸ் (Francis Xavier de Menezes). இவர் 1845ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்தார். இவரே ஆசியாவின் முதலாவது இரட்சர் சபைத் துறவியுமாவார்.

தொடரும் ..................




# "மன்னிப்போம் மறப்போம் அன்பை நாம் வளர்ப்போம்" "1CROSS+3NAILS=4GIVEN"

மன்னிப்போம் மறப்போம். அன்பை நாம் வளர்ப்போம். இது ஒரு சிறிய வசனம். ஆனால் இதுதான் கிறிஸ்த்தவத்தின் அடிப்படைத்தத்துவம். ஆணிவேர் மற்றும் விண்ணகத்தின் திறவுகோல். "IF GOD DID NOT FORGIVE US, THE HEAVEN WOULD BE EMPTY" என்று ஓர் அழகான ஆங்கிலப்பொன் மொழி உண்டு. அதாவது கடவுள் எமை மன்னித்திராவிட்டால் விண்ணுலகம் என்பது வெறுமையாகவே இருந்திருக்கும். நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து நம் பாவங்களை மன்னிக்கவே மனித அவதாரம் எடுத்து அவமானத்தின் சின்னமாகிய சிலுவை மரணத்தை ஏற்றார். கள்வர்களையும் அயோக்கியர்களையும் தண்டிக்கும் ஆயுதமாகவும் அருவருப்பின் அவமானத்தின் சின்னமாகவும் இருந்த சிலுவை இயேசுக் கிறிஸ்துவின் மன்னிப்பினால் பரிசுத்தமானது. கிறிஸ்தவத்தின் நாமமாகவும் அனைத்திற்கும் மருந்தாகவும் மாறியது. சிலுவை என்பதனுள் அன்பு, தியாகம், நட்பு, பாதுகாப்பு வார்த்தை, வாழ்க்கை, மன்னிப்பு மனிதாபிமானம் என்னும் எத்தனையோ விடயங்கள் அடங்கியுள்ளன. மன்னிப்பை விளக்க அருமையான சமன்பாடு ஒன்று உள்ளது. 1CROSS+3NAILS=4GIVEN". அதாவது ஒரு சிலுவையில் 3 ஆணிகளால் இயேசுக் கிறிஸ்து அறையப்பட்டது மன்னிப்பிற்கு இணையானது. இயேசுக் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தையும் தந்தையின் சித்தத்தையும் கிறிஸ்தவத்தின் அடிப்படை தத்துவத்தையும் அழகாக ஆழமாக இந்த சிறிய சமன்பாடு விளக்கிவிட்டது. இயேசுக் கிறிஸ்துவே கூறுகிறார் மன்னி மன்னிக்கப்படுவாய் என்று.

திருவிவிலியம் மத்தேயு நற்செய்தி ஆறாம் அதிகாரத்தில் "மற்ற மனிதர்கள் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீகளானால் உங்கள் விண்ணகத்தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதர்களை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்கமாட்டார்" என்று இயேசுக்கிறிஸ்து அழகாகச்சொல்கின்றார். அதேபோல லூக்காஸ் நற்செய்தியில் "உங்களுடைய சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் பாவம் செய்தால் அவரைக் கடிந்துகொள்ளுங்கள். அவர் மனம் மாறினால் அவரை மன்னியுங்கள். ஒரே நாளில் அவர் ஏழு முறை உங்களுக்கு எதிராகப் பாவம் செய்து ஏழு முறையும் உங்களிடம் திரும்பி வந்து "நான் மனம் மாறிவிட்டேன்" என்று சொல்வாரானால் அவரை மன்னித்து விடுங்கள், என்றும் கூறியிருக்கின்றார்.

அண்மையில் உயிர்த்ததின தாக்குதலின்போது இலங்கையில் மிகையாகப்பாதிக்கப்பட்டவர்கள் கிறிஸதவர்களே. இத்தாக்குதல் சம்பவம் மிகப்பெரிய இனக்கலவரமாக மாறக்கூடிய சந்தர்ப்பமொன்று இலங்கை நாடு முழுவதிலும் இருந்தது. ஆனால் எமது கருதினார் அவர்களின் மேன்மையான செயற்பாடினால் அப்போது கருமேகமாய் இலங்கை தேசத்தின்மேல் நிலைகொண்டிருந்த ஒரு பழிவாங்கும் இனக்கலவரம் கரைதாண்டி கறைந்து போனதை யாராலும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. மேன்மைக்குரிய அதிமேதகு கருதினார் அவர்கள் குண்டு வெடித்த உடனே பழிவாங்கும் பழக்கம் கிறிஸ்த்தவத்திற்கும் கிறிஸ்தவர்களுக்கும் இல்லை என்றும் மன்னிப்பே எங்கள் ஆயுதம் என்று கூறினார். குண்டு வெடித்த சில நாட்களில் கொழும்பிலுள்ள பிரபலமான பள்ளிவாசலுக்குச்சென்று அங்கிருந்த இஸ்லாமிய சகோதரர்களை கட்டித்தழுவி புன்னகைத்த புகைப்படங்கள் மன்னிப்பின் உச்சத்தை வெளிக்காட்டியது. இந்த நடவடிக்கைக்கு எல்லாம் அடித்தளமிட்டது எங்கள் இயேசு பிராணின் மன்னிக்கும் தன்மைதான்.



இக் குண்டுவெடிப்பில் மிகவும் பாதிக்கப்பட்ட தேவாலயமான புனித அந்தோணியார் ஆலயத்தின் மீள் ஆரம்ப நேரம் இலங்கை மக்களை மட்டுமல்ல உலக மக்களையும் வியக்கச்செய்தது என்னவென்றால் அங்கு வைக்கப்பட்டிருந்த குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களின் பெயர்ப்பட்டியலில் குண்டு வைத்து இறந்தவனின் பெயரும் பொறிக்கப்பட்டிருந்தது. இது மன்னிப்பின் உச்சக்கட்டம். கிறிஸ்தவத்தையும் கிறிஸ்தவர்களையும் நினைத்து மற்றவர்கள் மெய்சிலிர்த்து நின்றனர். காரணம் கிறிஸ்தவர்கள் மன்னிப்பின் அடையாளமாக மன்னிப்பின் எடுத்துக்காட்டாக விளங்கினார்கள்.

இயேசுவின் மன்னிப்பு வார்த்தைகளுக்கு பொருந்துமாப்போல் காந்தி அடிகளாரும் கண்ணுக்குக் கண் என்று இருந்தால் இந்த உலகமே குருடாகத்தான் இருந்திருக்கும் என்று கூறினார். இருட்டு ஒருபோதும் இருட்டை அகற்றாது. ஒளி மட்டுமே இருட்டை அகற்றக்கூடியது. பகையால் பகையை வெல்ல முடியாது. அன்பால் மட்டுமே அதை வெல்ல முடியும். அதற்கு அச்சாரமாக அமைவது மன்னிப்பு. அன்பு இல்லாமல் மன்னிப்பும் இல்லை. மன்னிப்பு இல்லாமல் அன்பும் இல்லை. ஆகவே அன்பும் மன்னிப்பும் சரிநிகரானது. அன்பே கடவுள் என்றால் அன்பிற்கு ஈடேது சொல்.

திருத்தூதர் புனித சின்னப்பர் அழகாக பின்வருமாறு கூறுகிறார்,

"நான் மானிடரின் மொழிகளிலும், வானதூதரின் மொழிகளிலும் பேசின-
ாலும் அன்பு எனக்கில்லையேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும்
தாளமும் போலாவேன். இறைவாக்கு உரைக்கும் ஆற்றல் எனக்கு
இருப்பினும், மறைபொருட்கள் அனைத்தையும் அறிந்தவனாய் இருப்பினும்,
அறிவெல்லாம் பெற்றிருப்பினும், மலைகளை இடம்பெயரச் செய்யும்
அளவுக்கு நிறைந்த நம்பிக்கை கொண்டிருப்பினும் என்னிடம் அன்பு
இல்லையேல் நான் ஒன்றுமில்லை''.

மூதூர் A. S. K. அற்புத அன்ரன் ராஜ்
திருமலையிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஅவையும் இணையமும்





பிரிவு 1 : திருமேய்ப்பர்கள் கிறிஸ்துவின் பதிலாளிகள் என்ற முறையில் நம்பிக்கையின் ஆசிரியர்களாக அறிவிப்பதையும், அல்லது திருஅவையின் தலைவர்களாக வரையறுப்பதையும், கிறிஸ்தவ விசுவாசிகள், தங்கள் சொந்தப் பொறுப்பை உணர்ந்தவர்களாக பின்பற்றக் கிறிஸ்தவக் கீழ்ப்படிதலால் கடமைப்பட்டுள்ளனர்.

பிரிவு 2 : தங்களின் அறிவு, தகுதி மற்றும் சிறப்பு நிலைக்கேற்ப திருஅவையின் நலநன சார்ந்த காரியங்களைப் பற்றித் தங்கள் கருத்தைத் திருமேய்ப்பர்களிடம் தெரிவிக்கக் கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு உரிமையும் கடமையும் கூட உண்டு. அவ்வாறு செய்யும் போது கிறிஸ்தவ விசுவாசம், ஒழுக்க நெறிகளின் முழுமையையும் திருமேய்ப்பர்களுக்குரிய மரியாதையையும் கருத்தில் கொள்வதோடு பொது நலனையும் தனிநபர்களின் மாண்பையும் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதுவே திருஅவை பொதுநிலையினருக்கு கூறும் அறிவுரையாகும். தகவல் பரிமாறுதலுக்கு எவ்வகை உரிமை உள்ளதோ அதே அளவுக்கு கடமையும் பொறுப்புணர்வும் உண்டு. தகவலினால் தீங்கு உண்டாகும் என்று தெரிந்தால் அவ்வகை தகவல்களை பரப்பாமல் இருப்பதே மேல்.

கற்கை நெறியும், பயிற்சியும் அவசியமானதொன்றாகும். "தொடர்பாடலில் ஒழுக்கம்" என்னும் சுற்றுமடல் எண் 26, "இன்று அனைவருக்கும் ஊடகக்கல்வியும் பயிற்சி நெறியும் தனிப்பட்ட ரீதியாகவோ குழுக்களாகவோ கொடுக்கப்பட வேண்டும். இக் கற்கை முறை வெறுமனே செயல்முறைக் கல்வியாக இன்றி மக்களை உண்மை, நேர்மையான தார்மீக பகுப்பாய்வு மற்றும் ஆன்ம உருவாக்கல் ஆகியவை அறியக்கூடிய கற்கை முறையாக இருக்க வேண்டும். இவ்வகை உருவாக்கல் கற்கை முறையை வழங்குவது திருஅவையின் கடமையாகும்" எனக் கூறுகின்றது. இணையக் கலாசாரம் இன்றைய காலப்பகுதியில் துரிதமாக வளர்ச்சியடையும் போது அது தொடர்பான விழிப்புணர்வும் தகுந்த காலத்தில் கொடுப்பது திருஅவையின் கடமையாகும். எனவே தகுந்த அறிவுறுத்தல்களை அவள் வெளிப்படுத்தியுள்ளாள். இன்னமும் வெளிப்படுத்திக் கொண்டே உள்ளாள். சமூகத்தில் பல்வேறு நிலைகளில் உள்ளவர்களுக்கும், பெற்றோர், பிள்ளைகளுக்கும் இணையத்தின் பயன்பாடு பற்றி சுற்றமடல்கள் மூலமும் வத்திக்கான் சங்க ஏடு மூலமும் அறிவுறுத்தி வருகிறாள். ("வியப்புக்குரிய பல" எனும் சங்க ஏடு)

எனவே எமக்குள்ள கடமை, பொறுப்பு உணர்ந்தவர்களாக இணையத்தினை பயன்படுத்த வேண்டும். சமூக சீர்கேடுகளைத் தூண்டும், ஆன்மாவை அழிக்கும் விடயங்கள் இணையத்தில் இருந்தாலும் எம் அறிவினை பயன்படுத்தி நுண்மதியுடையவர்களாக செயற்பட வேண்டும். எவ்வித தகவலாக இருந்தாலும் சரியான புரிதல் இன்றி மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதோ. புரளி கதைப்பதையோ தவிர்க்க வேண்டும். இவ்வாறு கிறிஸ்தவ விழுமியங்களை தன்னகத்தே கொண்டு இணையத்தை பயன்படுத்துவதனால் நிச்சயமாக இணையம் நற்செய்தி பரப்புதலின் ஓர் சிறந்த ஊடகமாக அமையும்.

அருட்சகோ. பே. எமர்சன் றாகல்
இறையியல் பீடம்
கண்டி தேசிய குருமடம்

# போதை அரக்கன்






இன்று உலகை உலுக்கி கொண்டிருக்கும் பல்வேறு பிரச்சனைகளுக்குள் போதைவஸ்துப்பாவனை பூதாகரமாக உருவெடுத்துள்ளது. நம் வருங்காலப் பிரஜைகளின் முன்னேற்றப் பாதையின் முட்டுக்கட்டையாக, சாதனைப் பயணத்திலே வேதனை மிகு சோதனையாக, அழிவுக்கு இட்டுச் செல்கின்து. உயர்ந்த மேதைகளையும் இழிந்த பேதைகளாக்கி, அரிதான மானிடப்பிறவியை சிறிதான விலங்குப்பிறவியாக மாற்றுகின்ற அரக்கன் இப்போதை தான்.

இன்று நம் வருங்காலப் பிரஜைகளான இளைஞர்கள் கொலை, களவு, பாலியல்பலாத்காரம், வாள்வெட்டு போன்ற சமூக விரோதச்செயல்களில் ஈடுபட்டு தங்கள் ஆண்மை, பண்பாடு, கல்வி ஆகியவற்றிலிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கின்றனர். ஆரம்பகாலத்தில் அபின், கஞ்சா, கள் பாவனையில் இருந்து தற்போது ஹெரோயின், பொப்பி, குடு, மாபாபாக்கு என பலவகையாக பெருகியது. இது மட்டுமா? மேனாட்டிலிருந்து பலவித போதைக் குளுசைகளாகவும், சொக்லெட்டுக்களாகவும், பவுடர்களாகவும் பல்கிப்பெருகிக் கொண்டிருக்கின்றன.

கடந்த பல வருடங்களாக இதனை ஒழிப்பதற்கு பல சட்ட நடவடிக்கை எடுத்தாலும் அதனை ஒழிக்க முடிந்ததா? இல்லையே. பதிலுக்கு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகின்றது. எனினும் இப்போதை வஸ்துப்பாவனை உடனடியாக தீர்த்துக்கட்டக் கூடியதல்ல நீண்டகால திட்டமிடல் அவசியம். பாடசாலை மட்டத்திலிருந்து உயர்மட்டம் வரை இதை ஒழிப்பதற்கு நடவடிக்கைகளைப் படிப்படியாக நகர்த்தல் வேண்டும். பாடசாலை விதானத்தில் போதைவஸ்து தொடர்பான பாடவேளை இடம் பெற வேண்டும்.

"துஞ்சினார் செத்தாரில் வேறல்லர்-ஏஞ்ஞான்றும்
நஞ்சுண்பர்கள் உண்பவர்"

என்ற வள்ளுவர்.வாக்கிற்கிணங்க எப்பொழுதும் கள் உண்பவர்கள் நஞ்சுண்பவர்கள் ஆகின்றனர். இந்த நஞ்சுக்களால் என்ன ஏற்படுகின்றது? எண்சாண் உடம்புக்கே பிரதானமாக தலையில் பல வித நோய், ஆண்மைக்குறைபாடு, நரம்புத்தளர்ச்சி, உடலை இயக்கமுடியாத பலவீனம் என்பன போதை வழங்கும் பரிசுகளாகும். இந்நிலை தனி மனிதனுக்கு மட்டுமா? இல்லவே இல்லை அவரது குடும்பத்திற்கு ஏற்படும் அவலங்களையும், அவமானங்களையும் எண்ணிப்பாருங்கள். மனைவி, மக்கள் பட்டினியால் வாடிடுவர், உறக்கமின்றித் தவித்திடுவர். குடும்பமானம் காற்றோடு பறக்க வேண்டாத அவமானங்கள் வீட்டோடு வந்து சேரும். நவீன போதைப்பொருட்களை வாங்க அதிக பணம் தேவை. இந்த பணத்தை பெற்றுக்கொள்ள மனிதன் தன் நல்ல குணங்களையே விற்று விடுகிறான். களவு, கொலை, கொள்ளை, பொய் போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு திருடனாக மாறி வாழ்வில் வழி தெரியா குருடனாக வாழ்கிறான். இது மட்டுமா? இன்னும் எத்தனையோ சொல்லிக்கொண்டே போகலாம். அத்தனை கொடுமைகள் சிறுமைகள் இப்போதை என்னும் அரக்கனினால் வருகின்றன. எனவே இப் போதைக்கு அடிமையாகும் பேதை மனிதனா!நீ !சற்று சிந்தித்துப்பார்

துள்ளித்திரியும் பருவத்தில் சொல்லிமாளா இத்துயரம் உங்களுக்குத் தேவைதானா? வேண்டாம். இப் போதை அரக்கனை எதிர்த்துப் போராடுவோம். அதனால் வரும் வேதனைகளைத் தடுப்போம். பாடசாலைகளை சுற்றியுள்ள சமூக நிறுவனங்கள், நலன்விரும்பிகள், பல்சமய ஒன்றியங்கள், சமூகசேவையாளர்கள் போதை ஒழிப்புப்பணியை தெய்வீக பணியாக கொண்டு செயல்படவேண்டும். இப்பணியால் போதையற்ற உலகை உருவாக்குவோம் வருங்கால சமுதாயத்தை சாதனைச் சிகரமாக மாற்றி நாட்டில் முன்னேற்றத்தைக் காண்போம்.

ஆக்கம் : திருமதி. பிறிஜட் சுரேந்திரா
676, அன்புவழிபுரம்

# லூக்கா நற்செய்தியில் பெண்கள்......

சென்ற இதழ் தொடர்ச்சி ......

**ஓய்வு நாள் சட்டம் மீறப்படல்**

யூதர்கள் மிக முக்கியமான சட்டமாகக் கருதும் ஓய்வு நாள் சட்டத்தை மீறி, பதினெட்டு ஆண்டுகளாக நோயுற்றிருந்த பெண்ணைக் குணமாக்குகின்றார். ஓய்வு நாள் சட்டத்தை மீறியதோடு, ஓய்வு நாளைவிட ஒரு பெண் மிக முக்கியமானவள் என்பதை எல்லோருக்கும் போதிப்பவராக இயேசுவைக் காட்டுகின்றார் லூக்கா (13:14-17).

**இழுக்குகளைத் தவிர்த்தல்**

திருமுழுக்கு யோவான் கொலையானதற்குக் காரணம் சலோமியும் ஏரோதியாளும் எனக் காட்டுகின்றனர் மத்தேயுவும் மாற்கும் (மத் 14:3-12, மாற் 6:17-29). ஆனால் லூக்கா திருமுழுக்கு யோவானின் கொலைக்குக் காரணம் ஏரோதுதான் என்பதை ஏரோதின் வாய் வழியாகவே வெளிப்படுத்துகின்றார் (9:9). மற்ற நற்செய்திகளில் பெண்களை இழிவாகக் கூறியிருந்தாலும் தம் நற்செய்தியில் அதனைத் தவிர்க்கின்றார் லூக்கா.

**சவால் விடுக்கும் நற்செய்தி**

பெண்களை இரண்டாம் தரமாகக் கருதி ஒதுக்கும் சமூக, சமய, அரசியல், கலாச்சாரக் கூறுகளுக்கு லூக்காவின் நற்செய்தி சவாலாக அமைந்துள்ளது.

1.பெண்களைப் போகப் பொருளாகவும் காட்சிப் பொருளாகவும் காட்டிப் பணம் சம்பாதிக்கும் பண முதலைகளுக்கு, "செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார்" என்று பாடிய மரியாவின் வீர முரசொலி சவாலாக உள்ளது.

2.இயேசுவின் காலத்தில் பெண் சீடர்கள் இல்லை, எனவே பெண்களுக்குப் பணிக் குருத்துவம் அளிக்கப்பட முடியாது என்று கூறுபவர்களுக்கு, இயேசுவைத் தொடர்ந்து பின்சென்று, தம் உடைமைகளைக் கொண்டு பணிபுரிந்து அவரது பணியிலும் வாழ்விலும் பங்கேற்ற பெண்கள் சவாலாக உள்ளனர்.

3.நாட்டில் பெண்களின் விடுதலைக்கான சட்டங்கள் பல இருந்தும், அவை அமுலாக்கப்படாமல், வரதட்சணை, பாலியல் வன்முறை இவற்றினால் அல்லலுறும் பெண்களுக்கு இடைவிடாது தொந்தரவு செய்து பொல்லாத நடுவனிடம் நீதித் தீர்ப்புப் பெற்ற கைம்பெண் சவாலாக இருக்கின்றார்.

4.மாதவிடாய் காலத்தில் பெண்கள் தீட்டுப்பட்டவர்கள், எனவே அக்காலத்தில் அவர்கள் கோவிலுக்கோ, பீடப் பகுதிக்கோ செல்லக்கூடாது என்றும், வெளியே தனியாகச் சென்றால் பேய் பிடித்துவிடும் என்றும் இன்றுவரை சில மக்கள் நம்பிவருகின்றனர். இத்தகையோருக்குச் சமூக சட்டங்களையும் உடைத்தெறிந்த பன்னிரு ஆண்டுகளாக பெரும்பாட்டினால் வருந்திய பெண் சவாலாக உள்ளார்.

லூக்கா நற்செய்தியில் இப்பெண்கள் நமக்குச் சவால் விடுப்பதோடு சக்தியும் துணிவும் ஊக்கமும் அளிக்கின்றனர். எனவே லூக்கா நற்செய்தியாளர் விடுதலைக் கூறுகளை உள்வாங்கி அடிமைப்பட்டுள்ள பெண்ணினம் தனது சக்தியையும் மானிட மாண்பையும் உணரச்செய்வோம். தாழ்த்தப்பட்ட இனத்திற்கும் கீழ் உள்ள வெண்ணினம் விடுதலை பெறும்போதுதான் இறையாட்சி மலரும். எனவே புதிய வானம், புதிய பூமி மலர ஆண்-பெண் அனைவரும் கைகோர்த்துப் பெண்களின் விடுதலைக்காக உழைப்போம்.

அருட்செல்வி ஜோஸ்பின் காணிக்கை
விவிலிய விருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கமுடியுமா?

கொழும்பு மாநகரில் கோயில் கொண்டெழுந்த
புனித அந்தோனியார், செபஸ்தியார் ஆலயம் தன்னில்,
கொடூரமாய் பக்தர்களின் உயிர்களைக் காவுகொண்ட
சித்திரைத் திங்கள், உயிர்ப்பு ஞாயிறன்று
சிதைவுற்ற சடலங்கள் சின்னா பின்னமாக,
இரத்த வெள்ளத்தில் சிதறிக்கிடந்த காட்சி,
சிலுவை நாயகன் கிறிஸ்துவின் பாடுகளை
சிந்திக்க வைத்தனவே!

பாவம் அறியாத பச்சிளம் மழலைச் செல்வங்களை,
பரிதாபகரமாக படுகொலை செய்த பாவிகளே!
ஆண்டவன் சன்னிதியே அடைக்கலம் என்றெண்ணி
அதிகாலை வேளை ஆசையுடன் சென்ற
பாலர்தொடங்கி முதியோர் வரையுமுள்ளவர்களை
ஈன இரக்கமின்றி இலக்கு வைத்து
பாரிய குண்டுகளை வெடிக்கச் செய்த மதவெறியர்களே
மக்கள் மனதைப் புண்படுத்தி மண்ணோடு
புதைத்த மிலேச்சர்களே

கல்வாரி மலையில் கள்வரின் நடுவில்
கன்மலையாம் கிறிஸ்துவின் காட்சி
கல்லான இதயத்தையும் கரைய வைத்தனவே!
கரை புரண்டோடிய இரத்த வெள்ளத்தில்
கவலைக்கிடமான மக்களின் கொடூரக்காட்சி
நெஞ்சை விட்டு மறக்க முடியுமா?
அயல் மதங்களைப் பழித்து அன்பைச் சிதைத்து
ஆணவம் கொண்ட மத வெறியர்களே!

தேவனின் உயிர்மூச்சு நம்மவரின் உயிர்மூச்சே
தேவாலயத்தில் அபயக்குரல் எழுப்பியதும் அதுவே,
ஆபேலின் இரத்தம் இறை சன்னிதானத்தை எட்டியதே,
ஆண்டவர் இயேசுவின் இரத்தம் தந்தது ஜெயமே,
அவர் இரத்தம் பாவநிவாரணப் பலியாக சிந்தப்பட்டதே,
அநித்திய வாழ்விலிருந்து நித்திய வாழ்வுக்கு வழி வகுத்ததுவே
மானுடத்தின் மகிமை அறியாத அறிவிலிகளே!
மனிதனை மனிதனாக வாழவிடுங்கள்.

ஆக்கம் : திருமதி. தாபி

# உறவும் நட்பும் மலர..........



- ஆறு முக்கியமான சொற்கள்
  ஒப்புக் கொள்கிறேன், இது என்னுடைய தவறுதான்,
  நானே பொறுப்பு
- ஐந்து முக்கியமான சொற்கள்
  தங்களுடைய பணி சிறப்பானது,
  மனமார்ந்த பாராட்டுக்கள்
- நான்கு முக்கியமான சொற்கள்
  இதில் தங்களுடைய கருத்து என்ன?
- மூன்று முக்கியமான சொற்கள்
  தாங்கள் மனது வைத்தால்.......?
- இரண்டு முக்கியமான சொற்கள்
  'மிக்க நன்றி'
- ஒரு முக்கியமான சொல்
  'நாம்'
- தேவையில்லாத சொல்
  'நான்'

# கண்ணீரைத் துடைப்பவர்



உங்கள் கண்ணீரை யாராவது அலட்சியம் செய்யும் போது உங்கள் உள்ளம் தாங்க முடியாத வேதனையடைவது இயற்கை. சில இளம் பெண்கள் 'ஐயா என் கணவன் என் கண்ணீரை மதிக்கவில்லை' என்பார்கள். வேதனையோடு சில தாய்மார்கள், 'என் இதயத்தின் வேதனையை என் பிள்ளைகள் புரிந்து கொள்ளவில்லை' என்று சொல்வதுமுண்டு. ஆனால் ஆண்டவர் கண்ணீரை துடைக்கிறவர். உங்கள் கண்ணீரை கணக்கு வைக்கிறவர். உங்கள் கண்ணீரோடு சேர்ந்து தானும் கண்ணீர் விடுகிறவர். உங்கள் கண்ணீர் யாவையும் தம்முடைய பொற்கரத்தால் தொட்டு துடைக்கிறவர்.

'கண்ணீரோடு விதைக்கிறவர்கள் நிச்சயமாய் வெற்றியோடு அறுப்பார்கள்'.

ஆக்கம் : எம். எச். றொசிஸ்டா
பாலையூற்று

# அன்றாட வாழ்வில் தத்துவங்கள்



## 06. அஞ்சாமை

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
ஆச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"

என்ற பாடலின் அடிகள் அச்சமில்லாத மனதைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. வீரம் என்பது துணிச்சல் மனத்திடன் மனத்துணிவு ஊக்கம் உள்உரம் விவேகம் அஞ்சாமை என்ற பலகருத்துகளில் கூறலாம். துன்பம் வரும்போது துவண்டு விடாமல் உயிரையும் பொருட்படுத்தாமல் துணிந்து முன்னேறுவதாகும். ஆபத்துக் காலங்களில் என்ன நடக்கும் என்பதை முன்னறிந்து விவேகத்துடன் நடப்பது வீரமாகும். இந்த வீரத்தை உடற்பலம் உளப்பலம் என இரண்டாகப் பிரிக்கலாம். போர்க்களத்தில் அஞ்சாது நின்று போர்புரியும் வீரத்தை எமமுன்னோர் மறம் என்பர். போர்க்களத்தில் முகத்திலும் மார்பிலும் படிகின்ற வடுக்களைப் பொன்னிலும் மேலாகப் போற்றுவர் எம் முன்னோர். இந்த உடற்பலத்தைவிட உளப்பலம் நம் ஒவ்வொருவருக்கும் முக்கியமானது.

எமது வாழ்விற்கு ஏன் வீரம் தேவை? உண்மையை பேச நீதிக்கும் நியாயத்துக்கும் சத்தியத்துக்கும் சான்றுபகர வீரம் தேவை. எம்மை எதிர்கொள்ளும் சோதனைகளைக் கட்டுப்படுத்த வீரம் தேவைப்படுகின்றது.

அதேபோன்று எமது கடமைகளைக் கருத்தாய் செய்ய குறிக்கோளுடன் செய்ய குறிப்பிட்ட நேரத்தில் செய்ய கட்டுப்பாட்டுடன் செய்ய வீரம் தேவைப்படுகிறது.

அதுமட்டுமா எமது கொள்கை இலட்சியங்களில் ஏற்படும் தடைகளைத் தாண்டிச் செல்லவும் துன்பங்களைத் தாங்கிச் செல்லவும் தோல்விகளைக் கண்டு மனம் சோராதிருக்கவும் வீரம் தேவை.

மேலும் தன்மானத்தைக் காப்பாற்ற வாழ்வில் ஏற்படும் அவமானங்களைச் சகித்துக்கொள்ள பொறுத்துக்கொள்ள வீரம் தேவை

பாவத்திற்கு அஞ்ச வீரம் தேவை. அதனாலேயே "அஞ்சுவதற்கு அஞ்சுக" என்றார் வள்ளுவர். அதாவது தீயதைக்கண்டு ஓடிவிட வீரம் தேவை.

எமது நல்ல குணப் பண்புகளோடு வாழ எமக்கு வீரம் தேவை. அதுமட்டுமன்று எல்லோரும் விரும்பும் நல்ல தலைவனாக வளர வீரம் தேவை.அடக்கம் அறிவு அருள் அன்பு பண்பு ஊக்கம் ஒழுக்கம் நாணம் போன்ற நல்ல குணங்களை வளர்க்க எமக்கு வீரம் தேவை.

வீரத்தை வளர்த்துக் கொள்வது எப்படி? மனதைக் கட்டுப்படுத்துவதால் உண்மை பேசுவதால் நல்லவற்றைக் கண்டு பிடிப்பதால் விடாமுயற்சியை வளர்ப்பதால் நல்ல பண்புகளை வளர்ப்பதால் வீரத்தை வளர்த்துக்கொள்ள முடியும்.

எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யகூடாது என்று தெரியாது வாழ்கிறோம்.தெரிந்தாலும் சமுதாய அலையில் அகப்பட்டு வாழ்கிறோம் அஞ்சாது வீரத்துடன் வாழ்ந்து அவசியமானதை மட்டும் எமது வாழ்வில் பாவித்து நல்ல சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம்.

சிந்தனைக்கு.................

- உன்னைப் பற்றி யாராவது குறை கூறினால், குறை கூறும் அளவுக்கு நீ நடந்து கொண்டதாக வருத்தப்படு.
- இடையூறுகளைக் கண்டு கலங்காதே, இடையூறுகளில் தான் உனது வீரமும், தியாகமும் மனப்பக்குவமும் உயர்ந்த நோக்கங்களும் வளர்கின்றன.

தொடரும்.................

நன்றி.

# குட்டிக்கதை ஒன்று

Fr. N.C





இருமாணவருக்கிடையே வாக்குவாதம். அதாவது சண்டை நடக்கிறது. இருவரில் ஒருவன் மற்றவனுக்கு கன்னத்திலே "பளார்" என்று அறைந்து விட்டான். அறைவாங்கியவன் திடீரென்று ஒரு யோசனையோடு அறைந்தவனுக்கு அவனும் அறைகிறான்.

அங்கு நின்ற பெரியவர் இரண்டாவதாக அறைந்தவனிடம் "அவன் அறைந்தானென்றால் நீயும் அறையவாவேணும் அவனை மன்னித்திருக்கலாமே"

அதற்கு இரண்டாவதாக அடித்தவன் சொன்னான் "ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறுகன்னத்தில் அறை என்று தானே படித்திருந்தேன்" என்று சொன்ன போது பெரியவர் சொன்னார், "தம்பி பிழையாகப்படித்து விட்டாய் இயேசு கற்பித்தது, ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு" என்று தான்.

நீ என்னடா என்றால் ஒரு கன்னத்தில் அறைந்தவருக்கு மறுகன்னத்தில் நீ அறை என்று பிழையாகப்படித்து விட்டாயே என்று சொன்னார்.

அறிவதை சரியாக அறிய வேண்டுமென்பது உண்மையல்லவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லொயோலா சுற்றுச்சூழல் மற்றும் சமூகநீதி பாதுகாப்பு மையம் - ஒரு பார்வை




2015 ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் எழுதிய திருமடல் (Laudato Si), உலகின் ஒட்டு மொத்த கவனத்தையும் ஈர்த்தது. அந்த திருமடலில், பூவுலகை அழிவிலிருந்து காப்பாற்ற அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என அழைப்பு விடுத்தார். இந்த அறைகூவலை ஏற்று உலகெங்கும் உள்ள இயேசு சபை குருக்கள், சகோதரர்கள் பல பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். அத்தகைய முயற்சியின் வெளிப்பாடாக இலங்கை இயேசு சபையினர் இயற்கை பாதுகாப்பு மற்றும் சமூகநீதி மையம் என்ற அமைப்பை 2019 ஆம் ஆண்டு 2 ஆம் நாள் திருகோணமலையில் துவங்கியுள்ளார்கள்.

கடந்த சில மாதங்களாக பல்வேறுவிதமான சமூக ஆர்வளர்கள், மற்றும் மக்களிடம் கலந்து உரையாடி சில பணித்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. திருத்தந்தையின் திருமடலில் மிளிரும் ஆன்மீகக் கண்ணோட்டத்தோடு சுற்றுச்சூழல் பிரச்சனைகளை கையாண்டு. சுற்றுச்சூழல் சீரழிவுகள் பற்றி சமூகத்தில் ஒரு புரிதல் ஏற்படுத்த வேண்டும் என்பது இதன் முக்கிய நோக்கமாகும். இந்த சீரழிவுகளுக்கு பொருளாதார, அரசியல் காரணங்கள் மட்டுமல்ல தனிநபர்களின் ஒத்துழைப்பு இல்லாததும் பெரும் காரணமாய் உள்ளது. வளர்ச்சி, நாகரீகம் எனக்கருதி சுற்றுச்சூழல் சீரழிவுக்கு துணை செல்லும் போக்கை மாற்ற, பல விழிப்புணர்வு செயற்பாடுகளும் நடைபெற இருக்கின்றன. திருத்தந்தையின் கருத்துக்களை உணர்ந்து, சுத்தமான சமூகத்தை நேசிக்கும், ஆர்வமுள்ள பொது மக்களின் பங்களிப்பு பெரிதும் வரவேற்கப்படுகிறது.

தொடர்புக்கு:
அருட்தந்தை. ச. லாசர், சே.ச
இயக்குனர்
லொயோலா சுறறுச்சூழல் மற்றும் சமூக நீதி மையம்
238 உள்துறைமுக சாலை (வீதி)
திருகோணமலை
076 - 187 9222

## சிந்தனைக்கு.........



❖ நிறம் பார்த்து வரும் அன்பு
நிரந்தரம் இல்லை
மனம் பார்த்து வரும்
அன்புக்கு மரணமே இல்லை.

❖ அன்பிற்கு உருவம் இல்லை
பாசத்திற்கு வடிவம் இல்லை.
உலகில் எவரும் நிரந்தரம் இல்லை.
ஒருமுறை பிறப்போம்
ஒருமுறை இறப்போம்
இருக்கும் வரை ஆனந்தமாய்
இருப்போம்



❖ சொந்தக்காலில்
வாழ்ந்தாலும்
அடுத்தவனையும் மதி
ஏனென்றால்,
நீ சொந்தக் காலிலேயே
சுடுகாட்டுக்குச் செல்ல
முடியாது

❖ கடலில் இருக்கும் அத்தனை நீரும்
ஒன்று சேர்ந்தால் கூட ஒரு கப்பலை
மூழ்கடிக்க முடியாது - கப்பலுக்குள்
புகுந்தால் மட்டுமே அது சாத்தியம்
"வாழ்வின் எந்த பிரச்சினையும்
உங்களைப் பாதிக்கவே முடியாது
நீங்கள் அனுமதித்தால் தவிர"

❖ வாழ்க்கையில்
துன்பத்தை
அனுபவித்த காலத்தை
மறந்து விடு.
ஆனால் அது கற்றுக்
கொடுத்த பாடத்தை
மறந்து விடாதே

❖ உங்கள் குரலை இரக்கத்துக்காகவும்
உங்கள் காதுகளைக் கருணைக்காகவும்
உங்கள் கைகளைக் கொடைக்காகவும்
உங்கள் மனதை உண்மைக்காகவும்
பயன்படுத்துங்கள்



❖ ஒருவருடைய தவறை சுட்டிக்காட்டு
ஒருபோதும் குத்திக் காட்டாதே
தவறுகளைத் திருத்திக் கொள்ளலாம்
ஆனால் உன் சொற்களால் ஏற்பட்ட
காயத்திற்கு மருந்திட முடியாது

# பூமியின் வெப்பநிலை உயர்வும்........ திருத்தந்தை பிரான்சிஸின் கவலையும்......

LOYOLA CENTRE FOR
**ECOLOGY & JUSTICE**

பூமியின் வெப்பநிலை அதிகரித்துக்கொண்டே போவதால் பூமி அழிந்துவிடும் நிலையை எட்டிக்கொண்டிருக்கிறது என்று அறிவியல் ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இன்னும் 10 அல்லது 20 வருடங்களுக்குள் வெப்பநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தாவிட்டால் மனிதர்கள் உட்பட எல்லா உயிரினங்களும் அழிந்து விடும் என உலக நாடுகளின் அறிக்கை எச்சரிக்கின்றது. இந்நிலையில், திருத்தந்தை ஏன் கவலைப்பட வேண்டும்? அவர் மனிதர் மேலும், மற்ற உயிரினங்கள் மீதும் கொண்ட அக்கறையால் மட்டுமல்ல, உலக கத்தோலிக்கர்களின் ஆன்மீக வழிகாட்டி என்ற முறையில் நம் கடவுளாகிய ஆண்டவர் அன்போடும், அக்கறையோடும் உருவாக்கிய படைப்புகள் அனைத்தும் அழிவுறுவதைக்கண்டு கவலையுறுகிறார். 2015ஆம் ஆண்டு திருத்தந்தை எழுதிய "ஆண்டவரே உம்மை போற்றுகிறேன்" (Laudato Si) என்ற திருமடலை அந்த கவலையில் உருவாகிய காவியமாக நாம் காண்கிறோம்.

மனிதத்தை மிக ஆழமாக நேசிக்கும் திருத்தந்தை, இத்திருமடலில் "பூமித்தாய் அழுகிறாள்" என்று மனம் வருந்துகிறார். கணக்கற்ற காடழிப்பு, கனிய வள சூறையாடல், வான்வெளி மாசு, விவசாயத்தில் இரசாயன பயன்பாட்டால் பாழாகும் மண் என நீள்கிறது அவலங்கள். இப்படி பல அவலங்கள் பூமியின் மேனியில் காயங்களாகி சொல்லொண்ணா வேதனையை அடையச் செய்கின்றன. இறைவன் இயற்கையை இத்தகைய நோக்கத்தில் படைக்கவில்லை. படைத்த ஒவ்வொன்றையும் உற்றுநோக்கி, அவை "அனைத்தையும் நல்லதெனக் கண்டார்" என்று தொடக்கநூல் கூறுகின்றது. இன்று அந்த இயற்கை இப்படி இருக்கிறது என சிந்திப்பது நம் ஒவ்வொருவரின் கடமை

**இயற்கைச் சீரழிவு எவ்வாறு ஏற்படுகின்றது?**

ஏறத்தாழ 50 ஆண்டுகள் பல அறிவியலாளர்கள் ஏராளமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு இந்த தகவல்களை தந்திருக்கிறார்கள். அதாவது மனித இனம் தோன்றி பல ஆயிரம் ஆண்டுகள் பூமி வெப்பநிலை சீராகத்தான் மாறிக்கொண்டிருந்தது. ஆனால் கடந்த 200 ஆண்டுகளாக இந்த வெப்பநிலை அளவுக்குமேல் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. இன்னும் 20 ஆண்டுகளில் எல்லை மீறிப் போகும் அபாயமும் உள்ளது. குறிப்பாக, 200 ஆண்டுகளுக்கு முன்புதான் நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு தொழில் புரட்சி உருவாக்கப்பட்டது. இந்த நீராவி இயக்கத்திற்கு அடிப்படையாக பயன்படுத்தப்பட்டது நிலக்கரி, அதை தொடர்ந்து பூமிக்கடியில் கிடைக்கும் எரி எண்ணெய், எரி வாயு போன்றவையும் பயன்படுத்தப்பட்டன. இவை அனைத்தும் எரியும்பொழுது ஏற்படுகின்ற புகையில் "**காபன்டையாக்ஸைடு**" என்ற வாயு வெளியாகி வான்வெளி புகைமண்டலமாக காரணமாயிற்று.

**ஊசலாடும் உயிரினங்கள்......**

பூமியில் உள்ள ஒவ்வொரு உயிரினங்களுக்கும் வாழ்வாதாரமாக இருக்கின்ற சூரியஒளி, பயன்பாட்டிற்கு மேல் உள்ளது. அதில் பயன்படாத எஞ்சிய ஒளி வான்வெளிக்கே திரும்பிச்செல்ல வேண்டும் என்பது இயற்கையின் அமைப்பு, இறைவனின் படைப்பு. ஆனால் மனிதர்களின் சுய நலத்தினால், தொழில் விரிவாக்கத்தினால் உருவாகும் புகை மண்டலம், திரும்பிச்செல்லும் சூரியஒளியை தடுத்து பூமியிலேயே தங்கும்படி செய்கின்றது. அதனால் பூமியின் வெப்பநிலை கடந்த 200 ஆண்டுகளாகக் அதிகரித்துக்கொண்டே போகின்றது. இப்பொழுது உயிரினங்கள் தாங்கு சக்தியின் அளவு, மிகவும் மோசமான நிலைக்கு வந்துவிட்டது. இயற்கை சீரழிவு அதிகமாகிறது என்ற அச்சத்தினால், திருத்தந்தை கத்தோலிக்கர்களுக்கு மட்டுமல்ல எல்லா தரப்பினரையும் நோக்கி இந்த மடலை அனுப்பியுள்ளார்.

**திருத்தந்தை பார்வையில் சில தீர்வுகள்......**

❖ இயற்கை வளங்களை குறிப்பாக எரி வாயுக்களை உற்பத்தி செய்யும் தொழில் அதிபர்கள் தங்கள் தொழில் முறைகளை மாற்றி பூமியின் வெப்பநிலையை சீராக்கவேண்டும். சூரியஒளியை எரிச்சக்தியாக மாற்றி, நிலக்கரி, எரிவாயுக்களின் பயன்பாட்டை குறைக்க வேண்டும்.

❖ நாடாளுவோர் வெப்ப உயர்வை கட்டுப்படுத்தும் கொள்கைகளையும், திட்டங்களையும் உருவாக்கி துணிச்சலோடு செயலாக்கம் செய்ய வேண்டும்.

❖ ஒவ்வொரு மனிதரும் வளர்ச்சி, நாகரீகம் எனக்கருதி ஆடம்பரமான வாழ்க்கையை தவிர்த்து சுற்றுச்சூழலை பாதிக்காத வண்ணம் தங்கள் தேவைகளை குறைத்து எளிய வாழ்க்கை முறைக்கு மாறவேண்டும். ஏனென்றால் தனி நபர்களுக்கும் பொறுப்புண்டு.

❖அனுபவம் மிக்க ஆழமான ஆன்மீக வழிகாட்டியாய் செயலாற்றி வரும் திருத்தந்தை, மனிதர்களின் சுயநலத்தையும், இயற்கை மற்றும் சமூகத்தின் மீது கொண்டுள்ள அக்கறையற்ற தன்மையையும் அறிந்தவராய், இன்றைய நிலை மாற பல வழிமுறையை வலியுறுத்துகிறார்.

❖தனிநபர்களும், சமூகமும் இயற்கையை பேணும் மனமாற்றம் (Ecological conversion) அடைய வேண்டும். இயற்கை உருவாக்கத்தில் இறைவன் கொண்டிருந்த அன்பை உணர்ந்து, இயற்கையின் புனிதத் தன்மையை ஏற்று, இயற்கையை பேணும் வாழ்க்கை முறைக்கு தனிநபர்களும், சமூகம் "மனமாற்றம்" காண திருத்தந்தை அழைக்கின்றார்.

**இறுதியாக.......**

திருத்தந்தையின் பார்வையில் இந்த பூமியில் வாழும் மனிதர்கள் யாவரும் இயற்கையை நேசிப்பவர்களாக இருக்கவேண்டும் என விரும்புகிறார். உண்மையான மனமாற்றம் அடையவேண்டும் என ஆசிக்கிறார். இன்றைய சூழ்நிலையில் ஆளுபவர்களும், தொழில் அதிபர்களும் இத்தகைய மனமாற்றத்தை அடைய தனி நபர்கள் ஒன்று கூடி செயல்பட்டால் பூவுலகு அழிவிலிருந்து தப்பும். இளம் சந்ததியினருக்கு நல்ல பாதுகாப்பான இயற்கை சூழலை உருவாக்க முடியும்.

**நாம் என்ன செய்யப்போகிறோம்?**
**திருத்தந்தையோடு இணைந்து சிந்திப்போம்...செயல்படுவோம்...**

அருட்தந்தை. ச. லாசர், சே.ச
இயக்குனர்
லொயோலா சுற்றுச்சூழல் மற்றும் சமூக நீதி மையம்
238 உட்துறைமுக சாலை (வீதி)
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாய் குட்டீஸ்
# திருவிவிலிய புதிர் போட்டி எண் : 40
# நெகேமியா அதிகாரம் 7 - 13 வரை

01. கடவுள் எப்படிப்பட்டவர்?
விடை :.........................................................................................
02. கடவுளின் சபைக்குள் யார் நுழையக் கூடாது என்று மோசேயின் நூலில் எழுதப்படடிருந்தது?
விடை :.........................................................................................
03. அனானி எப்படிப்பட்டவர்?
விடை :.........................................................................................
04. மற்ற ஊர்களிலும் நகர்களிலும் வாழ்ந்தோர் பட்டியலில் லேவியரின் சில பிரிவினர் எங்கு குடியிருந்தனர் ?
விடை :.........................................................................................
05. மக்கள் எத்தனை நாள் திருவிழா கொண்டாடினர்?
விடை :.........................................................................................
06. நிலபலனில் பத்தில் ஒரு பகுதியை வசூல் செய்பவர்யார்?
விடை :.........................................................................................
07. தலைமைக்குரு ஏசாவின் வழிவந்தோர் யார்?
விடை :.........................................................................................
08. பாடகர் பாடகிகள் எத்தனை பேர்?
விடை :.........................................................................................
09. எல்யாசிபு யாருக்கு உறவினர்?
விடை :.........................................................................................
10. எகிப்திலிருந்து மீட்டு வந்த மக்களுக்கு இரவில் வழிகாட்டியது எது?
விடை :.........................................................................................

பெயர் :.........................................................................................
பங்கு :.........................................................................................
முகவரி :.........................................................................................
தரம் :.........................................................................................

**முடிவுத்திகதி : 15. 09.2019**

## மறைக்கல்வி கற்போம்

01. நோயிற் பூசுதல் வழியாக நோயுற்றவர் பெறுபவை எவை?
❖நோயுற்றவர் ஆண்டவர் கிறிஸ்துவை சந்திக்கிறார்
❖தூய ஆவியின் ஆற்றலைப் பெறுகிறார்.
❖கிறிஸ்துவின் பாடுகளில் பங்கேற்று, நோயினால் ஏற்படும் துன்பங்களைப் பொறுமையுடன் தாங்கிக் கொள்ள மனஉறுதி பெறுகிறார்.
02. மூவொரு இறைவனின் பெயரை நாம் நாள்தோறும் பலமுறை கூறி செபிக்கும் சந்தர்ப்பங்கள்?
❖சிலுவை அடையாளம் வரையும்போது
❖திரித்துவப் புகழ் கூறும்போது
❖மூவேளைச் செபத்தில்
❖செபமாலையில்
❖திருப்பலியில்
❖அருட்சாதனக் கொண்டாட்டங்களில்
❖ஆசி கூறும்போது
03. அருட்கருவிகளின் வகைகள் எவை?
❖ஆசிகள்
❖பொருள்கள்
(திருவிவிலியம், திருநீறு, புனித படங்கள், உத்தரியம்,....)
❖பக்தி முயற்சிகள்
04. அருளடையாளங்களில் பயன்படுத்தப்படும் தைலங்கள்?
❖ஆயத்த தைலம், கிறிஸ்மா தைலம், நோயாளிகளின் தைலம்
05. 'மரியா இறைவனின் தாய்' என்ற மறை உண்மையை எப்போது எதனால் அறிக்கையிடப்பட்டது?
❖கி. பி. 431ஆம் ஆண்டு எபேசில் கூடிய திருச்சங்கம்
06. 'பாவம் நம்மிடம் இல்லை என்போமென்றால் நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்வோம்' என எந்த நூல் கூறுகிறது?
❖1யோவான் 1 : 8
07. ஞான நூல்கள் எத்தனை?
❖07
08. இறைவாக்கினர் நூல்கள் எத்தனை?
❖18
09. ஆண்டவராகிய கிறிஸ்து ஏற்படுத்திய திருஅவைக்கு நான்கு சிறப்பு பண்புகள் உள்ளன. அவை எவை?
❖ஒற்றுமை, புனிதம், பொதுமை, திருத்தூதர் வழிமரபு
10. 'திருஅவையின் ஆசிரியம்' என்றால் என்ன?
❖இறைவார்த்தைக்கு தகுந்த பொருள் விளக்கம் தந்து மறையுண்மைகளை அதிகாரப்பூர்வமாக போதிக்கும் பணியைத் திருஅவை ஆற்றுவதை

## விவிலிய வாசிப்பு ~ 2019

| ஆவணி 2019 | | |
|---|---|---|
| எண்ணிக்கை | மாற்கு | நீதிமொழிகள் |
| 01) 4:34-49 | 11:27-33 | 1:1-6 |
| 02) 5:1-10 | 12:1-12 | 1:7-9 |
| 03) 5:11-31 | 12:13-17 | 1:10-19 |
| 04) 6:1-15 | 12:18-27 | 1:20-23 |
| 05) 6:16-27 | 12:28-34 | 1:24-28 |
| 06) 7:1-89 | 12:35-37 | 1:29-33 |
| 07) 8:1-4 | 12:38-40 | 2:1-5 |
| 08) 8:5-26 | 12:41-44 | 2:6-15 |
| 09) 9:1-14 | 13:1-2 | 2:16-22 |
| 10) 9:15-23 | 13:3-13 | 3:1-6 |
| 11) 10:1-10 | 13:14-23 | 3:7-8 |
| 12) 10:11-36 | 13:24-27 | 3:9-10 |
| 13) 11:1-3 | 13:28-31 | 3:11-12 |
| 14) 11:4-30 | 13:32-37 | 3:13-15 |
| 15) 11:31-35 | 14:1-9 | 3:16-18 |
| 16) 12:1-16 | 14:10-11 | 3:19-20 |
| 17) 13:1-33 | 14:12-16 | 3:21-26 |
| 18) 14:1-25 | 14:17-21 | 3:27-32 |
| 19) 14:26-45 | 14:22-26 | 3:33-35 |
| 20) 15:1-31 | 14:27-31 | 4:1-6 |
| 21) 15:32-41 | 14:32-42 | 4:7-10 |
| 22) 16:1-35 | 14:43-52 | 4:11-13 |
| 23) 16:36-50 | 14:53-65 | 4:14-19 |
| 24) 17:1-13 | 14:66-72 | 4:20-27 |
| 25) 18:1-24 | 15:1-5 | 5:1-6 |
| 26) 18:25-32 | 15:6-15 | 5:7-14 |
| 27) 19:1-10 | 15:16-20 | 5:15-21 |
| 28) 19:11-22 | 15:21-32 | 5:22-23 |
| 29) 20:1-13 | 15:33-41 | 6:1-5 |
| 30) 20:14-20 | 15:42-47 | 6:6-11 |
| 31) 20:22-29 | 16:1-8 | 6:12-15 |

"கடவுளின் வாக்கை நான் புகழ்கின்றேன்.
கடவுளையே நம்பியிருக்கின்றேன்.
எதற்கும் அஞ்சேன். (திபா 56:4)




| புரட்டாதி 2019 | | |
|---|---|---|
| எண்ணிக்கை | மாற்கு | நீதிமொழிகள் |
| 01) 21:1-9 | 16:9-11 | 6:16-19 |
| 02) 21:10-20 | 16:12-14 | 6:20-26 |
| 03) 22:1-21 | 16:15-18 | 6:27-35 |
| 04) 22:22-40 | 16:19-20 | 7:1-5 |
| எண்ணிக்கை | லூக்கா | நீதிமொழிகள் |
| 05) 22:41-23:12 | 1:1-4 | 7:6-23 |
| 06) 23:13-26 | 1:5-25 | 7:24-27 |
| 07) 23:27-24:14 | 1:26-38 | 8:1-11 |
| 08) 24:15-25 | 1:39-45 | 8:12-13 |
| 09) 25:1-18 | 1:46-56 | 8:14-26 |
| 10) 26:1-65 | 1:57-66 | 8:27-32 |
| 11) 27:1-11 | 1:67-80 | 8:33-36 |
| 12) 27:12-23 | 2:1-7 | 9:1-6 |
| 13) 28:1-15 | 2:8-21 | 9:7-8 |
| 14) 28:16-31 | 2:22-38 | 9:9-10 |
| 15) 29:1-11 | 2:39-40 | 9:11-12 |
| 16) 29:12-40 | 2:41-52 | 9:13-18 |
| 17) 30:1-16 | 3:1-20 | 10:1-2 |
| 18) 31:1-24 | 3:21-22 | 10:3-4 |
| 19) 31:25-54 | 3:23-38 | 10:5 |
| 20) 32:1-4 | 4:1-13 | 10:6-7 |
| 21) 33:1-49 | 4:14-15 | 10:8-9 |
| 22) 33:50-56 | 4:16-30 | 10:10 |
| 23) 34:1-29 | 4:31-37 | 10:11-12 |
| 24) 35:1-34 | 4:38-41 | 10:13-14 |
| 25) 36:1-13 | 4:42-44 | 10:15-16 |
| இணைச்சட்டம் | லூக்கா | நீதிமொழிகள் |
| 26) 1:1-18 | 5:1-11 | 10:17 |
| 27) 1:19-46 | 5:12-16 | 10:18 |
| 28) 2:1-25 | 5:17-26 | 10:19 |
| 29) 2:26-3:11 | 5:27-32 | 10:20-21 |
| 30) 3:12-22 | 5:33-39 | 10:22 |

"ஆண்டவரே பேசும், உம் அடியான் கேட்கிறேன்"
(1 சாமு 3:9)



| ஐப்பசி 2019 | | |
|---|---|---|
| இணைச்சட்டம் | லூக்கா | நீதிமொழிகள் |
| 01) 4:15-40 | 6:6-11 | 10:24-25 |
| 02) 4:41-49 | 6:12-16 | 10:26 |
| 03) 5:1-22 | 6:17-19 | 10:27-28 |
| 04) 5:23-33 | 6:20-26 | 10:29-30 |
| 05) 6:1-25 | 6:27-36 | 10:31-32 |
| 06) 7:1-26 | 6:37-42 | 11:1-3 |
| 07) 8:1-20 | 6:43-45 | 11:4 |
| 08) 9:1-29 | 6:46-49 | 11:5-6 |
| 09) 10:1-22 | 7:1-10 | 11:7 |
| 10) 11:1-32 | 7:11-17 | 11:8 |
| 11) 12:1-28 | 7:18-35 | 11:9-11 |
| 12) 12:29-13:18 | 7:36-50 | 11:12-13 |
| 13) 14:1-29 | 8:1-3 | 11:14 |
| 14) 15:1-23 | 8:4-8 | 11:15 |
| 15) 16:1-17 | 8:9-10 | 11:16-17 |
| 16) 16:18-17:13 | 8:11-15 | 11:18-19 |
| 17) 17:14-20 | 8:16-18 | 11:20-21 |
| 18) 18:1-13 | 8:19-21 | 11:22 |
| 19) 18:14-22 | 8:22-25 | 1123 |
| 20) 19:1-21 | 8:26-39 | 11:24-26 |
| 21) 20:1-20 | 8:40-56 | 11:27 |
| 22) 21:1-21 | 9:1-6 | 11:28 |
| 23) 21:22-22:12 | 9:7-9 | 11:29-31 |
| 24) 22:13-30 | 9:10-17 | 12:1 |
| 25) 23:1-25 | 9:18-21 | 12:2-3 |
| 26) 24:1-4 | 9:22-27 | 12:4 |
| 27) 24:5-25:4 | 9:28-36 | 12:5-7 |
| 28) 25:5-19 | 9:37-43அ | 12:8-9 |
| 29) 26:1-19 | 9:43ஆ-45 | 12:10 |
| 30) 27:1-10 | 9:46-48 | 12:11 |
| 31) 27:11-26 | 9:49-50 | 12:12-14 |

"புல் உலர்ந்து போம், பூ வதங்கி விழும்,
நம் ஆண்டவரின் வார்த்தையோ
என்றென்றும் நிலைத்திருக்கும்."
(எசா 40:8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித லூக்கா நற்செய்தி அதி 16 - 18 வரை

❖ எவரும் பங்கு பற்றலாம்
❖ போட்டோப் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
❖ போட்டியாளர்கள் சரியான விடையளித்தால் குலுக்கள் முறையில் பரிசு வழங்கப்படும்.

1ம் பரிசு 500/- 2ம் பரிசு 300/- 3ம் பரிசு 200/-

01. மனந்தளராமல் இறைவனிடம் மன்றாட வேண்டும் என்பதற்கு இயேசு கூறிய உவமை என்ன?

……………………………………………………

02. - "நீங்கள் உங்களை மக்கள் முன் நேர்மையாளராகக் காட்டிக் கொள்கிறீர்கள் என யார் யாரைப் பார்த்துக் கூறியது?

……………………………………………………

03. 'பார்வை பெறும்: உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று' என்று யார் யாரிடம் கூறியது?

……………………………………………………

04. இயேசுவை தூரத்தில் பார்த்த பத்து தொழுநோயாளர்களும் கூறியது என்ன?

……………………………………………………

05. புனித லூக்கா 18ம் அதிகாரம் 20ம் வாக்கியத்தில் கூறப்பட்டுள்ள கட்டளைகள் எவை?

……………………………………………………

……………………………………………………

06. இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களை வைத்து வாக்கியத்தைப் பூர்த்தி செய்க.

மிகச் சிறியவற்றில் ……………………………… பெரியவற்றிலும் நம்பத் தகுந்தவராய் இருப்பார். மிகச் சிறியவற்றில் ……………………………… பெரியவற்றிலும் நேர்மையற்றவராய் இருப்பார்.

07. 'எழுந்து செல்லும், உமது நம்பிக்கை உமக்கு நலமளித்தது' என்று இயேசு யாரிடம் கூறினார்?

……………………………………………………

08. வரிதண்டுவோர் தனது வேண்டுதலை எவ்விதம் இறைவனிடம் சமர்ப்பித்தார்?

……………………………………………………

……………………………………………………

09. இயேசு எரிக்கோவை அடைந்தபோது அங்கு யாரைக் கண்டார்?

……………………………………………………

10. இறையாட்சி எப்போது வரும், என பரிசேயர் இயேசுவிடம் கேட்டபோது அவர் கூறிய பதில் என்ன?

……………………………………………………

……………………………………………………

11. தாங்கள் நேர்மையானவர்கள் என்று நம்பி மற்றவர்களை இகழ்ந்து ஒதுக்கும் சிலரைப் பார்த்து இயேசு கூறிய உவமை என்ன?

……………………………………………………

12. ஏழை இலாசர் இறந்த போது எங்கு, யாரால் கொண்டு செல்லப்பட்டார்?

……………………………………………………

……………………………………………………

13. 'செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதை விட எது எளிது' என இயேசு கூறினார்?

……………………………………………………

14. 'என் எதிரியைத் தண்டித்து எனக்கு நீதி வழங்கும்' என்று யார் யாரிடம் கேட்டது?

……………………………………………………

……………………………………………………

15. குழந்தைகளை இயேசு தொட வேண்டுமெனக் கொண்டு வந்தபோது சீடர்கள் அவர்களை அதட்டியதைக் கண்டு அவர்களிடம் கூறியது என்ன?

……………………………………………………

……………………………………………………

பெயர் : ……………………………………
பங்கு : ……………………………………
முகவரி: ……………………………………
……………………………………

முடிவுத்திகதி : 15. 09. 2019

## வெற்றியைக் காணவே.....

அருட்பணி. N.C. அருள்வரதன்

**இதோ கவிதை வரிகள் ..........**
**சரியாக வடிவமையுங்கள்**

❖ அன்பினை நம்மோடு ஒன்றிணைத்தே
❖ இணைந்த அன்பினை எல்லோரோடும்
❖ பேதங்களின்றியே வாழும்போது
❖ தீமைகளை விலக்குவோம் வாழ்விலே அதனால்
❖ நன்மைகளை நிறைந்தே காண்போமே
❖ இன்னல்கள் இடையூறுகள் பிறருக்குச் செய்வது
❖ வாழ்வுக்கு ஏற்றவைகளல்லவே
❖ மகிழ்வின் நிறைவுகளைக் காண்போம் அதனால்
❖ நன்மைகளால் வெற்றிகளைக் கண்டடைய
❖ துணிந்தே நாமும் செல்வோமே

இப்போது கவிதை வரிகளை சரியாக வடிவமையுங்கள்
எல்லோரும் சரியாக வடிவமைத்தால்
குலுக்கல் மூலம் தெரிவு இடம்பெறும்


1ம் இடம் 500/-
2ம் இடம் 300/-
3ம் இடம் 200/-
முடிவுத்திகதி 15.09.2019

## கவிதை வரிகளை சரியாக வடிவமைத்தல் போட்டி

**சரியான கவிதை வரிகள்**

**நிறைந்த நிலை காணவே**

❖ எங்கும் அமைதி வேண்டும்
❖ எதிலும் அமைதி வேண்டும்
❖ வார்த்தையின் வன்முறைகள்
❖ வாழ்வோடு வன்முறைகள்
❖ வேண்டாத நிலைகளிவை
❖ வாழ்வோடு இணைய வேண்டாமே
❖ அமைதி சமாதானம் நல்லுறவுகளே
❖ வாழ்வுக்குத் தேவையானவைகள்
❖ இவைகளை வாழ்வோடு இணைத்துக் கொண்டு
❖ இதயங்கள் இன்பத்தில் நிலை கொள்ளவே
❖ நிறைந்த நிலைகளைக் காண்போமே



பங்குபற்றியவர்கள் : 40 பேர்
மிகச் சரியாக வடிவமைத்தவர்கள் : 07 பேர்

**பரிசுக்குரியவர்கள்**

1ம் பரிசு ரூபா 500/-
செல்வி. பெ. அல்போன்சியா
பாரதி புரம்,
திருகோணமலை

2ம் பரிசு ரூபா 300/-
பிலிப் ஜோன் விஷோபா
கிறிஸ்து அரசர் ஆலயம்.
கன்னியா

3ம் பரிசு ரூபா 200/-
திருமதி. பி. சுரேந்திரா
676, அன்புவழிபுரம்

## விசேட போட்டி - 2019

## புனித லூக்கா நற்செய்தி : அதிகாரம் 04 - 06 அதிகாரங்கள்

## போட்டி முடிவுகள்

**பங்குபற்றியவர்கள் : 78பேர்**

**மிகச் சரியாக விடை எழுதி பரிசு பெறுவோர்**

1ம் பரிசு ரூபா 500/-
லொரன்சி றன்சியா ஜொனத்தன்
இல 75/32, 8ம் வட்டாரம்
சிலுவைமலை, சாம்பல்தீவு

2ம் பரிசு ரூபா 300/-
கே. புஸ்பம்
இல : 49, அந்தோனியார் வீதி,
பாலையூற்று

3ம் பரிசு ரூபா 200/-
சு. கௌசல்யா
இல : 216/12, சுடரொளி ஒழுங்கை
பாலையூற்று

**பங்கு பற்றிய அனைவருக்கும் நன்றிகளும் பாராட்டுக்களும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

### விவிலியம் வாசிப்போம்

பங்குபற்றியவர்கள் : 37 சிறுவர்கள்

பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/=
செல்வன்.M.S. ஹெவின் கிஷேற்றஸ்
கண்ணகி அம்மன் வீதி,
7ம் குறுக்குத்தெரு,
தாண்டவன்வெளி,
மட்டக்களப்பு



2ம் பரிசு 300/=
ஜெ. ஷெனுவ்
மின்சார நிலைய வீதி,
மூதூர்

3ம் பரிசு 200/=
ஜே. ஜூவிஸ் றெஜினோல்ட்
4ம் ஒழுங்கை,
பெரியகுளம்,
சாம்பல்தீவு

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 33
## கொலோசையர் அதி 1 - 4 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப | ■ | வா | | | ■ | ■ | | ■ | ம |
| | ■ | ■ | ம | ■ | ஒ | தி | | | |
| | ஓ | ■ | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | ■ | வ | | வி | ■ | | | | |
| | ■ | ■ | | | தா | ■ | | பொ | |
| | ந | | | | | | ஆ | ■ | |

01. ஆண்டவ.....து ப........யில்
02.திருத்தொ......டர்
03. வாழ்.......
04. ஓ........வு நாள்
05.நல்லெண்.........ம்
06. ஒளிமய.........ன
07. பொய் பே......தீர்க.......
08. தா.......மை
09. வழிப்........கும்
10. மறைபொரு.....கிய
11. மகிழ்.....சி கொள்.....றேன்
12. வரவே.......பு
13. படைப்......னைத்.......க்கும்

பெயர்:.......................................................


முகவரி:.......................................................

பங்கு:.......................................................

முடிவுத்திகதி 15.09.2019

## சிறுவர்களுக்கான போட்டி
## படத்திலுள்ள 06 வித்தியாசங்களை கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்
### இயேசு தண்ணீரை இரசமாக மாற்றுதல்

01



02



- பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 இற்கு மாத்திரம் நிறம் தீட்டி வித்தியாசங்களை கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்
  1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=

பெயர் .......................................................

முகவரி .......................................................

பங்கு .......................................................

தரம் .......................................................

முடிவுத் திகதி 15.09. 2019

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி எண் : 38
## எஸ்ரா அதிகாரம் 6 - 10 வரை



01. பாரசீக மன்னன் தாரியு (06:12)
02. யூதா, பென்யமீன் (10:09)
03. இவர் இஸ்ரயேலின் கடவுளான ஆண்டவர். மோசேக்கு அளித்திருந்த திருச்சட்டநூலின் வல்லுனர். (07:06)
04.நீதியுள்ளவர் (09:15)
05 6ம் ஆண்டு, அதார்திங்கள், 3ம் நாள் (06:15)
06. 05 மாதங்கள் (07:09)
07. நீர் சொல்வது சரி, உமது வார்த்தையின்படியே நாங்கள் செய்வோம். (10:12)
08. அதிகாரிகளும், ஆளுநர்களும் (09:02)
09. கிழிந்த ஆடையோடம், மேலுடையோடும், முழந்தாளிட்டு (09:05)
10. எருசலேமில், 03 நாட்களில் (10:7-8)

பங்குபற்றியவர்கள் : 21 பேர்
மிகச் சரியாக விடையளித்தோர்

பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு ரூபா 500/-
கே. ஷனுகாஷ்
75, 2ம் குறுக்குத் தெரு,
ஆனந்தபுரி.
அலஸ்தோட்டம்

2ம் பரிசு ரூபா 300/-
சு. பகீதரன்,
678, அன்புவழிபுரம்.
திருகோணமலை

3ம் பரிசு ரூபா 200/-
திரேசா சேவியர்
37/3, வித்தியாலயம் வீதி,
திருகோணமலை

பங்குபற்றிய அனைவருக்கும் நன்றிகளும் பாராட்டுக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவில் கால்பதித்த முதல் மனிதரிடம் புனித திருத்தந்தை 6ம் பவுல்




நிலவில் முதன்முதலில் காலடி பதித்த மனிதர்களுக்கு, புனித திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள் வழங்கிய வாழ்த்தையும், ஆசிரையும், அந்நிகழ்வின் ஐம்பதாம் ஆண்டு நிறைவான ஜுலை 20, இச்சனிக்கிழமையன்று நினைவு கூர்ந்துள்ளது வத்திக்கான் வானொலி.

1969ம் ஆண்டு ஜுலை 16ம் திகதி, அமெரிக்க ஐக்கிய நாட்டு மூன்று விண்வெளி வீரர்களை நிலவிற்கு ஏற்றிச் சென்ற அப்பல்லோ 11 விண்கலம், ஜுலை 20ம் திகதி நிலவில் இறங்கியது வீரர்கள் நிலவில் இறங்கிய அந்த அதிசயத்தை, காஸ்தெல்கந்தோல்போ வத்திக்கான் விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த புனித திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள், நிலவை வென்றவர்கள் என்று தன் வாழ்த்தையும், நன்மதிப் பையும் தெரிவித்துள்ளார்.

மனிதர் நிலவில் நடந்தது, கடவுளின் கைவண்ண வேலையின் மகத்து வத்தை அங்கீகரிப்பதாக உள்ளது என்றும், புனித திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள், அச்சமயத்தில் தெரிவித்துள்ளார்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

# அழிவின் விளிம்பில் 27ஆயிரம் வன விலங்குகள்



உலக அளவில் ஏறத்தாழ 27,150 வன விலங்குகள் அழி வின் விளிம்பிலும், அச்சுறுத்த லுக்கும் உள்ளாகி இருப்பதாக அனைத்துலக இயற்கை பாது காப்பு மையம் எச்சரிக்கை விடு த்துள்ளது.

இதில், நீர் மற்றும் நிலத்தில் வாழும் உயிரினங்கள் 40 விழுக்காடும், பாலூட்டிகள் 25 விழுக்காடும், தாவரங்கள் 34 விழுக்காடும், பறவைகள் 14 விழுக்காடும், சுறா உள்ளிட்ட மீன் இனங்கள் 31 விழுக் காடும், பவளப் பாறைகள் 33 விழுக்காடும் அழிவின் விளிம்பில் உள்ளன. இது தற்போது வரை கண்டறியப் பட்டுள்ள மொத்த வன விலங்கினங்களின் எண்ணிக்கையில் 27 விழுக்காடு என்பது குறிப்பிடத்தக்கது.

இயற்கையின் உணவுச் சங்கிலியில் மிக முக்கிய பங்கு வகிக்கும், பாறு கழுகு என்று அழைக்கப்படும் பிணந்தின்னி கழுகு வகைகள், உலக அளவில் 99 விழுக்காடு அழிந்து விட்டனவாம்.

உலகின் 12வது மிகப் பெரிய பல்லுயிர் பெருக்க நாடான இந்தியாவில் 8 விழுக்காட்டு வன உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன. 2014ம் ஆண்டு அனைத்துலக இயற்கைப் பாதுகாப்பு மையம் வெளியிட்ட அறிக்கையில் இந்திய அளவில் 4850 வன விலங்குகளும் 2119 தாவர இனங்களும் அழிவின் விளிம்பில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

# அதிகரித்து வரும் போதைப்பொருள் வர்த்தகம்



தென்கிழக்கு ஆசியாவில், நாடு கடந்து செயல்படும் குற்றக்கும்பல் அமைப்புக்கள் வளர்ந்து வருவது டன் ஆதிக்கத்தையும் முக்கியத்து வத்தையும் அதிகமதிகமாக பெற்று வருகின்றன.

போதைப்பொருள், மருந்துகள், கள்ளச்சரக்குள், மனிதர் மற்றும் பல்வேறு விலங்கினங்களை வர்த்தகம் செய்வதன் வழியாக குற்றக்கும்பல்கள் பல்லாயிரம் கோடி டொலர்கள் என ஒவ்வோர் ஆண்டும் இலாபம் ஈட்டுகின்றன என்று ஐ. நா. வின் போதைப்பொருள் கட்டுப்பாடு மற்றும் குற்றப்பிரிவு அலுவலகம் தன் அறிக் கையில் குறிப்பிட்டுள்ளது.

2013ம் ஆண்டில் 1500 (15பில்லியன்) கோடி டொலர் வருவாயைக் கொடுத்த போதைப்பொருள் வர்த்தகம் கடந்த ஆண்டில் 3030 கோடியிலிருந்து 6140 கோடி டொலராக அதிகரித்துள்ளது. அவுஸ்ரேலியா, ஜப்பான், நியுசிலாந்து, தென்கொரியா ஆகிய நாடுகளின் சந்தைகளில் மட்டுமே இந்த வர்த்தகம் ஏறத்தாழ 2000 கோடி டொலர் வருவாயைக் கொடுத்துள்ளது. இது உலகளவில் கிடைக்கும் வருவாயில் மூன்றில் ஒரு பகுதியாகும்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**



# பிலிப்பைன்ஸ் இளையோர் விரும்பும் திருஅவை

பிலிப்பைன்ஸ் கத்தோலிக்க திருஅவையில் இளையோர் பின்பற்றி வாழ்வதற்கேற்ற தலைவர்கள் தேவைப்படுகின்றனர். என்று, அந்நாட்டில் நடை பெற்ற புதியவழி நற்செய்தி அறி விப்பு (PCNE) கருத்தரங்கில் கூறப்பட்டது.

ஜுலை 21, ஞாயிற்றுக்கிழமையன்று, தலைநகர் மனிலாவில் புனித தாமஸ் பல்கலைக்கழகத்தில் நிறை வடைந்த இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட ஐந்தாயிரத்திற்கு அதிகமான பிரதிநிதிகள், இளையோரின் வாழ்வில் உடனிருந்து பயணிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர் என்று யூக்கா செய்தி கூறியது.

பிலிப்பைன்ஸ் கத்தோலிக்க திருஅவையில் இளையோர் பின்பற்றி வாழ்வதற்கேற்ற தலைவர்கள் தேவைப்படுகின்றனர். என்று, அந்நாட்டில் நடைபெற்ற புதியவழி நற்செய்தி அறிவிப்பு (PCNE) கருத் தரங்கில் கூறப்பட்டது.

ஜுலை 21, ஞாயிற்றுக்கிழமையன்று, தலைநகர் மனிலாவில் புனித தாமஸ் பல்கலைக்கழகத்தில் நிறை வடைந்த இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட ஐந்தாயிரத்திற்கு அதிகமான பிரதிநிதிகள், இளையோரின் வாழ்வில் உடனிருந்து பயணிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர் என்று யூக்கா செய்தி கூறியது.

பிலிப்பைன்ஸ்சில் முதன்முதலில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதன் 500ம் ஆண்டு யூபிலி விழா வுக்கான, ஒன்பது ஆண்டு தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ள தலத்திருஅவை, அத்தயாரிப்பின் ஒரு கட்ட மாக, புதியவழி நற்செய்தி அறிவிப்பு கருத்தரங்கையும் ஒவ்வோர் ஆண்டும் நடத்தி வருகிறது.

புதியவழி நற்செய்தி அறிவிப்புக்கு பிலிப்பைன்ஸ் தலத்திருஅவை எவ்வாறு பதிலளிக்கின்றது என்பதை ஆய்வுசெய்வதற்கென, 2013ம் ஆண்டில், மனிலா பேராயர் கர்தினால் லூயிஸ் அந்தோனியோ தாக்லே அவர்கள், கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**



## குருத்துவ வாழ்வில் வெள்ளி விழா காணும் அருட்பணியாளர்






*Ad Multos Annos Vivat!*

| | |
|---|---|
| பெயர் | : அருட்பணி. அந்தோனி அகுஸ்தீன் நவரெட்ணம் |
| பிறந்த திகதி | : 08 பெப்ரவரி 1968 |
| குருப்பட்டம் பெற்ற திகதி | : 24 ஆகஸ்ட் 1994 |
| தந்தை | : அமரர். திரு. வ.அ.இராசரெத்தினம் |
| தாய் | : அமரர். திருமதி. அந்தோனி மேரி லில்லி தெரேஸ் |
| சகோதரங்கள் | : 09பேர் (பெண் - 03, ஆண் - 06) |

**கல்வி கற்ற பாடசாலைகள்**

01. தி/மூ/புனித அந்தோனியார் மகா வித்தியாலயம் மூதூர் (தரம் 1-11வரை)
02. மட்/ புனித மிக்கேல் கல்லூரி மட்டக்களப்பு (உயர்தரம் )

**குருமடங்கள்**

01. புனித வளனார் சிறிய குருமடம் திருப்பெருந்துறை, மட்டக்களப்பு
02. புனித பிரான்சிஸ் சவேரியார் பெரிய குருமடம் கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
03. தேசிய குருமடம் - அம்பிட்டிய, கண்டி

**மேற்படிப்பு** : - இந்தியா, உரோம், இத்தாலி

**பணித்தளங்கள்**

01. திருச்சிலுவை ஆலயம் - சொறிக்கல்முனை
02.புனித அன்னம்மாள் ஆலயம் - வீச்சுக்கல்முனை
03. மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் - (திருகோணமலை மட்டக்களப்பு)
04. அனைத்துலக அன்னை ஆலயம் - பனிச்சையடி, திராய்மடு

**தற்போது,**

01. சமூகத்தொடர்பு நிலைய இயக்குனர் (திருகோணமலை)
02. புனித மிக்கேல் கல்லூரி ஆசிரியர் (மட்டக்களப்பு)
03. முதுநிலை விரிவுரையாளர், கிழக்கு பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, மட்டக்களப்பு.

**எழுதிய நூல்கள்**

சிலுவைப்பாதை நூல்கள்
அன்பின் மகிழ்ச்சி (திருத்தூது ஊக்கவுரை)
கிழக்கில் பிரான்சிய இயேசு சபையினர்

*செபிப்போம்! வாழ்த்துவோம்!*

அருட்பணியாளரின் பணி மென்மேலும் சிறப்பாகத் தொடர திருகோணமலை மறைமாவட்டமாக இணைந்த இறையாசீர் வேண்டுவதோடு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

- திருமலைத்தீபம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org